27

அன்புமயம்
அறிவே துணை.

ஸ்ரீ கைவல்ய சுவாமிகள் கட்டுரைக் களஞ்சியம்.

குடியரசுப் பிரசுரம்.

நாடார் குல மித்திரன் வெளியீடு

No 2.

ஸ்ரீ முத்துமாரியம்மன் அச்சாபீஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1930.

[விலை அணா 2.

R34
N30
175857

நமது கருத்துரை.

செந்தமிழ் முழங்கும் நந்தமிழ் நாட்டில் ஆரிய நாகரிகம் என்று வந்து புகுந்ததோ அன்றுமுதல் இன்றுவரையும் நமது நாடு ஜாதி, சமயக் கோட்பாடுகளாகிய மூட நம்பிக்கைக்குள்ளாகிவிட்ட தென்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

ஆயினும் புத்தர் முதலிய பதினெண்சித்தர்கள் உண்மையை உலகத்திற்கு நிரூபணம் செய்துவந்திருப்பது போல பூர்வகாலத்திலுள்ள மக்கள் அறிவு வளர்ச்சிக் கொள்கைகள் அழிந்து போகாமற் காக்கச் சீர்திருத்தக்காரர்கள் தோன்றி உண்மையுணரச்செய்யாமலுமில்லை.

தற்போது தீண்டாமையென்னும் கொடுமையைப் பரப்பும் அறிவிலிகளுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தும் சுயமரியாதை இயக்கம் தோன்றி அக்காலச்சித்தாதிகளைப்போன்ற ஸ்ரீ கைவல்யம், திரு. ஈ. வெ. ராமன் முதலிய பேரறிஞர்கள் எழுதிவரும் கட்டுரைகளால் மக்களுக்கு பகுத்தறியுமியல்பு வெகு தீவிரமாகப் பரவிவருவது கண்கூடு. அப்பெரிய இயக்கத்தைக் கண்டிப்பாருமுளர்.

அவ்வாறு கண்டித்தும், சுயமரியாதைக்காரர்களை வெகு அற்பமாக நினைத்தும் எழுதிய திரு. மணி திருநாவுக்கரசு முதலியாரவர்களுக்கு ௸ கைவல்யசாமியவர்கள் எழுதிய மறுப்பானது சுயமரியாதை இயக்கத்தைக் குறைகூறும் எல்லோருக்கும் நல்லறிவுறுத்தும் நல்லுரையாய்க் காண்பதால் அந்நான்கு கட்டுரைகளையும் புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கின்றோம். இன்னும் அப்பெரியாருடைய பல அரிய பெரிய கட்டுரைகளையும் அச்சிட்டு மக்கள் அறிவு வளர்ச்சியைக்கருதி சகாயமான விலைக்கு வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம். பள்ளிக்கூட மாணவர்கள் விரும்பினால் பாதி விலைக்குக் கொடுப்பதாக உத்தேசித்திருக்கிறோம். வேண்டுவோர் விரைவாக ஆர்டர் கொடுக்க வேண்டுகிறோம்.

சூ. ஆ. முத்து நாடன்,
"நாடார் குல மித்திரன்" ஆசிரியன்,
அருப்புக்கோட்டை.

ஸ்ரீ கைவல்ய சுவாமிகள் கட்டுரைக் களஞ்சியம்.

அவர் ஆசையும் தீர்ந்துபோகட்டும்.

திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் சுய மரியாதை இயக்கத்தைக் கண்டிக்க வேண்டுமென்ற எண்ணம் அவர் பத்திரிகை ஆரம்பத்திலிருந்தே தெரியப்படுத்தியிருக்கிறது. அவரும் பல சமயம் அதைக்காட்டி வந்திருக்கிறார். "வேட்டைக்குதவாது!" என்கின்ற தலைப்பெயருடன் எழுதப்பட்டிருந்த மூன்று வியாசங்களும் வேண்டுமென்றே மிக்க கடினமாக எழுதப்பட்டிருந்தன. இப்பொழுது அவர் பத்திரிகையில் 'குறிப்புகள்' என்று அவர் எழுதியிருப்பதின் கீழ், கல்வி யில்லாத பலர் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்திருத்தலால் கற்றாரைப் பழிப்பதே கருமமாகக் கொண்டுள்ளனர். அவர்கள் கற்றவர் சொல்லைத் துரும்பென மதிக்கின்றனர். முன்னோர் நூலையும் இகழ்கின்றனர். இவற்றை யெல்லாம் அவர்கள் பிரமாணமாகக் கொள்ளாத போது ஒன்று மில்லாத இவர்கள் சொல்லைப் பிறர் எப்படி ஒப்புக்கொள்வார்களெனத் தெரியாமல் இருப்பது புல்லறிவின் வீக்கம் போலும், என்று கண்டவைகளுக்கு பதிலெழுத வேண்டியது அவசியமாக இருக்கிறது.

கல்வியில்லாதவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் பலர் சேர்ந்திருக்கிறார்கள். பதற்றமாகப் பிதற்றமாட்டார். புல்லறிவின் வீக்கம் போலும், தர்க்கிக்கப் போதிய ஞானமில்லை, வசைபாடத் துடங்குவது இவருக்கு இயல்பு.,

இவருக்கு இறைவன் நல்லறிவை யளிப்பானாக, என்னும்
இலக்கிய இலக்கணப் பதங்களின் அர்த்தம் தெரிந்து
கொள்ளப் போதிய கல்வி எங்களிட மில்லாததினால் அவை
கள் எங்களுக்கு வசை யென்று படாவிட்டாலும் குற்றம்
சொல்லுவதாக உணர்கிறோம். அக்குற்றம் சரியானபடியும்
உண்மையாகவும் நிரூபிக்கப்படவில்லை என்று நாங்கள்
எடுத்துக் காட்டுகையில் பண்டிதர்களில் சிலர் கோபிக்கிறார்
கள். உடனே சுயமரியாதைக்காரர்கள் கல்வி யில்லாதவர்
கள், பெரியவர்களையும் முன்னோர் நூலையும் இகழ்கின்றார்
கள் என்று சொல்லி விடுகிறார்கள். இவர்கள் சொல்லியபடி
சுயமரியாதைக்காரர்கள் கல்வியில்லாதவர்களாக விருந்
தாலும், சாஸ்திரக்ஞனும் அறிவாளியும் ஒத்துக்கொள்ளும்
படியான பதில், சாஸ்திரத்தைக் கொண்டே பல சொன்
னோம். அது போலவே இப்பொழுது திரு. மணி. திருநாவுக்
கரசு முதலியாரும் சொல்லுகிறார். எங்களுக்குக் கல்வியும்
தர்க்கிக்கப் போதிய ஞானமும் இல்லாவிட்டாலும் எங்கள்
இயக்கத்தின் உண்மைகளைச் சொல்லியே ஆக வேண்டும்.
உண்மையை உணர்ந்தவர்களும் கல்வி கற்றவர்களும் தர்க்க
ரீதியில் போதிய ஞானம் கண்டவர்களும் அநேகர் உலகத்தி
லிருக்கிறார்கள். மணி. திருநாவுக்கரசு முதலியார் ஆசையும்
திருப்தி யடையும்.

நன்னூல் படித்து தொல்காப்பியம் தொட்டவுடன்
அகஸ்தியர் இலக்கணம் வடகோட்டிலிருந்ததா? தென்
கோட்டில் அழிந்ததா? என்று ஆராய்ச்சி பண்ணக் கற்ற
வர்கள், சுயமரியாதை இயக்கத்தில் இல்லாவிட்டாலும்
கல்வி என்பது கற்றல், தெளிதல், அறிவு என்கிற பொரு

APR 1931

ளுடையது என்ருல், அக்கல்வியைக் கற்றவர்கள் சுய மரியாதை இயக்கத்தில் அநேகர் சேர்ந்திருக்கிருர்கள். கற்ருரைப் பழிப்பதே அவர்களுக்கு கருமமுமல்ல. ஜன தர்ம விதியை தெய்வீகமாக வெண்ண அந்த விதியைக் காற்றிலே தூற்றிவிடுகிற கல்வியும் சத்குணத்தையும் காரியசித்திக்குரிய அனுஷ்டானத்தையும் ஒன்ருகக் கருதிக் குழப்பிப் பழகி வந்திருக்கும் கல்வியும், பொதுத் தரும விதியினிடத்தில் அவநம்பிக்கையை உண்டாக்கும் கல்வியும் கற்று ஜனத்தைக் காட்டிலும் ஜாதியே பெரிதென்ற கொள்கைகளை பல விதமான தந்திரங்களால் கற்பித்துக் கற்ருர்களைக் குற்றமும் சொல்லுகிருர்களே யல்லாமல், நம்முடைய ஆண்மையை நசுக்கி பழிக்கிடமாக்கிய குரூரமான ஜாதி ஆச்சாரங்களினின்றும் சாஸ்திர ஏமாற்று நிர்ப்பந்தங்களினின்றும் விடுபட்டு முடிதூக்கி தோள் கோர்த்து மனிதனோடு மனிதனுக வாழவைக்கும் கல்வி கற்ருரைச் சுயமரியாதைக்காரர்கள் துரும்பென மதித்ததில்லை, அவ்விதம் மதிக்கவும் மாட்டார்கள்.

திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் கற்றவர்கள் இன்னவர்களென்பதைத் தெளிவுபடுத்தவில்லை. அதை அவர் தெளிவாகக் கூறியிருந்தால் துரும்பென மதித்ததும், மதியாததுமான விபரங்களை சொல்லுவதற்கு எளிதாகவிருக்கும். அம்மானையிலிருந்து அருணுசலப்புராணம் வரையிலும் படித்தவர்களையும் நமது நாட்டில் படித்தவர்களென்றே சொல்லி வந்ததுமுண்டு. இலக்கணக் கோர்வையால் வசீகரம் செய்யத்தக்க பாடல்களைப் பாடி பாமரஜனங்கள் நம்புவதற்கு தெய்வ சம்பந்தமான கற்பனைக் கதைகளைக்

175857

கோர்த்து அவரவர்கள் கொண்ட தெய்வங்களை விசேடப் படுத்தி அதையே நம்புவதற்கு முயற்சித்து அவைகளையே சாஸ்திரங்களெனச் சொல்லி புத்தியைப் பிரமிக்கச் செய்யத் தக்க பலவிதமான சொற் பிரயோகங்களும் பலவிதமான வியாக்யானங்களும் செய்யும் சாமர்த்தியத்தால் பண்டிதர்கள் பெருமையும் இன்பமு மடைந்தார்கள். அவ்விதமான பண்டிதக் கல்வியால் அனுபவத்திற்குவேண்டிய அறிவு உண்டாகவில்லை. அநேக காலமாக மேற் சொன்ன கல்விகளால் ஒற்றுமையும் சமரசமும் காணப்படாமல் ஆத்ம பயிற்சியின் நிலையிலுங்கூட ஜனங்கள் கவனிக்கப்படாமல் சிதறுண்டவர்களாய் இருந்து ஒவ்வொரு விதத்திலும் மிதிக்கப்பட்டவர்களாய் சமூக வாழ்க்கையிலும், மத விஷயங்களிலும், ராஜீய நிலையிலும் சரியானபடி அணிவகுக்கப்படாம லிருந்தார்கள். நமது சமூகங்கள் அவ்வித நிலைமையிலிருந்தமையாலே மொகலாயர், டச்சு, போர்த்துக்கேசியர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய சிறு கூட்டத்தார்கள் ஆதீனத்திற்குட்பட்டும் டிப்புசுல்தான், ஐதர் ஆலி முதலிய தனி மனிதர்கள் அதிகாரத்திற்குட்ப்பட்டும், அவர்கள் கல்விக்கு முன்னால் நமது பத்தி முத்தி முதலிய கல்வி தூசி போல் பரந்தோடி அநேகரை தெய்வதேசத்திற்கே அனுப்பியும் விட்டது.

இலக்கிய இல்க்கணமும் கவிச்சுவையும் வேண்டியது தான். பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் பரமனைப்பாடி அவரண்டை போவதற்கு மட்டும் அவை ஏற்பட்டதல்லு. பரமனிடத்திலும் அங்கு போகும் வழியிலும் போட்டியும் சண்டையும் எல்லைத் தர்க்கமுமில்லை. ஆனதால் அவ்விடங்

களைச் செம்மைப் படுத்துவதற்குப் பண்டிதர்களெல்லாம் அவ்விடத்து சேனாதிபதிகளாக அமரவேண்டுவதுமில்லை. ஊண், உடை, குடியிருப்பு வசதிகளிலும், பழக்க வழக்கமான மனப்பான்மைகளிலும், நமது ஜனங்களின் கவனத்தை செயற்கை அழகு இழுத்துச் செல்லாத காலம், ஜனங்களும் வஸ்திரமின்றியே இருக்கக்கூடிய காலம், அடர்ந்த விருக்ஷங்களும் குகைகளுமே வாசஸ்தலமாகவிருந்த காலம், அறுப்பதும், அடிப்பதும் பொங்கல் போடுவதுமே ஆண்டவன் அமைத்த விதியென்றிருந்த காலம், ஊருக்கப்பால் ஓடை, ஓடைக்கப்பால் ஊரில்லை, ஓடையைத் தாண்ட உதவாது என்று நினைத்துக்கொண்டிருந்த காலம், அப்படிப்பட்ட காலங்களில் சரீர சக்திகளும், மனோ சக்திகளும் வேறு போக்கின்றி தெய்வ சம்பந்தம் வைத்துக் கொண்டன. பலவிதமான யாகங்களைப் பலவித தெய்வங்களுடன் வர்த்தக முறையில் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவை யனைத்தும் மாறி இப்பொழுது சாஸ்திரிகள் சீமையில் வட்ட மேஜை மகா நாட்டு அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்வித மாறுந்தன்மையான உலகில் சென்றுவிட்ட காலத்திய விதிகளையும், சம்பிரதாயங்களையும், அதை உண்டு பண்ணின நூல்களையும், உபயோகமற்றவையென்று கண்டால் தள்ளிவிடுவதும் வழக்கம் தானே? பழைய ஆசிரியர்கள்மாணுக்கர்கள் தலையில் பழைய ஏடுகளை ஏற்றி வாத்தியத்துடன் ஆடி 18-ந் தேதி ஆற்றுப் பிரவாகத்தில் போடுவது நமது பள்ளியின் வழக்கமல்லவா? திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் ஆசிரியராக விருந்தும் அதை மறந்து முன்னோர் நூலை சுயமரியாதைக்காரர்

கள் இகழ்கிறார்கள் என்று கோபிக்க நியாயமில்லை. இகழ்வதற்கும் உபயோகப்படவில்லை என்று சொல்லுவதற்கும வித்தியாசமுண்டு.

இப்பொழுதோ தேச சொரூபமே மாறிவிட்டது. அரசாங்கமும் அதன் வழிகளும் புது வழிகளாய் விட்டன. பாஷைகளும் மாறி ஒன்றோடொன்று கலந்து விட்டன. ஜனங்களின் நிறங்களும், வேஷங்களும் மாறிவிட்டன. நமது பூர்வீக தெய்வங்களும் எங்கேயோ உயரத்தில் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறதே யல்லாமல் முன்போல முன்னோர் நூலில் சொல்லியபடி கீழேவந்து நமதுகூட விளையாடும் வழக்கத்தையும் மறந்தே போயிற்று ஜனத்தின் உதவி பெற்று வாழும் பக்தர்களும் முக்தர்களு மிருக்கிறார்களே யல்லாமல் கடவுள் அருளும் அன்பும் பெற்று எல்லோரையும் கைலாயத்திற்கும் வைகுண்டத்திற்கும் கூடவே கூட்டிக் கொண்டு போகிறவர்களையும் காணோம். நமது இரக்ஷகர்களான திருப்பதி வெங்கடாஜலபதியின் பிரதிநிதியான மகுந்துவும், சைவ கர்த்தாக்களான மடாதிபதிகளும், பிர்ம சொரூப நிர்ணயரான சங்கராச்சாரியும் அவரவர்கள் தெய்வங்களின் பிரசாதங்களில் நம்பிக்கை யிழந்து இங்கிலீஷ் டாக்டர்களின் ஊசியில் நம்பிக்கை கொண்டதையும் கண்டோம். நாமெல்லாம் சமயாச்சாரிகளின் சந்தானமாகவும் சப்தரிஷிகளின் சந்ததிகளாகவு மிருக்கலாம். அவர்களது காலத்து நாமில்லை. தற்காலம் நீராவியந்திரங்களும் நீராவிக் கப்பல்களும் மின்சார விசைகளும் நம்மைக் கூர்மையுடன் நோக்குகின்றன. இந்த இருபதாம் நூற்றாண்டின் நூதனக் கல்வியுடனும் பண்டிதனுடனும் வேலையாட்களுடனும்

ஐரோப்பா, அமெரிக்கா கண்டத்தவர்களுடனும் தற்காலம் இருந்து நாமும் வாழ வேண்டுமானல் நாம் எந்தக் கல்வியைப் போற்றியும், எந்தக் கற்ருரை மதித்தும் ஆக வேண்டு மென்பதை ஆலோசித்துப் பார்க்க அனுபவமே சிறந்த பிரமாணமாக விருக்க, அனுபவத்தில் விளங்கும் உண்மைகளுக்கெல்லாம் ஆதாரம் காட்ட பழைய நூல்களை ஏன் தேடவேண்டும்? பழைய ஏடு என்ற சாயைகளுக்கு அடிமையாக ஜீவனையே இனியுமே அன்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்றே சுயமரியாதைக்காரர்கள் கேட்கிருர்கள்.

புராணங்களும் சாஸ்திரங்களும் ஒருபுற மிருக்கட்டும். வேத சுருதி என்பதே நமது தேசக் கல்வியில் சிறப்புடையது. அதுவேயெல்லா இந்து சமயங்களுக்கும் பிரமாணம். அந்த சிறந்த சுருதியின் அவஸ்தையைப்பாருங்கள். ஒருவர் ஒன்று, மற்றவர் இன்னென்று, மூன்ருதவர் வேருென்று, பின்னெருவர் இதை யெல்லாம் கண்டித்து, வேருெருவர் ஒன்றுமேயில்லையென்று இப்படி சுருதியைக்கொண்டுபோய் சேர்த்திருக்கும். இவர்கள் சொன்னதெல்லாம் வேதத்தின் பெயரிலேயே கூறி யிருக்கிருர்கள். இவர் கூறிய இத்தனை பழைய ஏடுகளிலும் சத்திய நெறி குறைவுபட்டிருக்கக் காரணமென்ன? சத்தியம் விளங்கி பொது லோக விதி தென்படாத இடத்தில் தெய்வம் எப்படி விளங்கும்? அதனுல் உயர்ந்த சாதனங்களே நமது நாட்டில் அழிந்து விட்டதென்று கற்றவர்களில் யார் ஒத்துக் கொள்ளவில்லை? கற்றவர்களெல்லாம் சொல்லியே இருக்கிருர்கள். ஏ அர்ச்சுனு! உயர்ந்தசாதன மென்பதெதுண்டோ அதெல்லாம் நானென்று தெரிந்துகொள் என்று ஸ்ரீ கிருஷ்ணனும்

சொன்னார். உயர்ந்த சாதனங்களை உண்டுபண்ணினாலல்லவோ பகவான் நமது நாட்டில் விளங்குவார். முன்னோர் சொன்ன பழைய ஏடுகளையே பாடிக்கொண்டிருந்தால் பகவான் விளங்குவாரா? இத்தனை காலமாகப்பாடியும் ஆடியும் பல கைங்கிரியங்கள் செய்தும் பார்த்தாய் விட்டதே பகவான் அருள் நமக்குப் பலிக்கவில்லையே.

சுயமரியாதை இயக்கம் பண்டிதர்களைக் குற்றம் சொல்லவும் கற்றவர்களைத் துரும்பென மதிக்கவும் தோன்றவில்லை. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் அவர்கள் படிப்பிற்கும் பழக்கத்திற்கும் விரோதப்படுகிறது. அப்பொழுது அவர்கள் அதை அளவிற்கு மீறி கண்டிக்கப் புறப்படுகிறார்கள். சுயமரியாதைக்காரர்கள் கல்வி யில்லாதவர்களென்றும், சாஸ்திரம் தெரியாதவர்களென்றும், அவர்களை ஒழிக்கவே கங்கணம் கட்டிக்கொண்டோமென்றும் சில பண்டிதர்கள் சொன்னார்கள். அதற்கு நாங்கள் சொல்லும் பதிலில் அவர்கள் சாஸ்திரமென்று நம்பிக்கொண்டிருந்த கதைகளின் பித்தலாட்டங்கள் வந்து விடுகின்றன. அப்பொழுது கோபிக்கிறார்கள். அதிலிருவழிக்காரர்களுக்கும் நன்மையில்லை. மூன்றாதவர்களின் ஆதிக்கத்துக்கே அவை உபயோகப்பட்டு விடுமோ என்பதை நினைக்கையில் பயமாக விருக்கிறது.

திருஞான சம்பந்தர் சமணர்களை கழுவில் போட்டார் என்ற விஷயமாக சிறிது நாட்களுக்கு முன் பத்திரிகைகளில் விவகாரம் நடந்தது வாசகர்களுக்கு ஞாபக மிருக்கும். கழுவில் போட்டதற்கு அகச்சான்று இல்லை என்றார்

கலியாணசுந்தர முதலியார். பெரிய புராணத்தையும் தேவாரத்தையும் கலியாணசுந்தர முதலியார் படித்ததில்லே யென்ருல் யார் ஒப்புவார்கள்? படிப்பில்லாத சுயமரியாதைக்காரர்கள் அதிலுள்ள அகச்சான்றை எப்படிக்கண்டுபிடிக்க முடியுமென்றும் நினைத்தார்? அப்படி யிருந்தும் தேவாரத்திலும் பெரிய புராணத்திலுமுள்ள அகச்சான்றை கண்டெடுத்து திருவிளையாடல் புராணம், அதிலுள்ள படம், மதுரைக் கோவில் தெப்பக்குளச் சித்திரம், கோவில் திருநாள், பல பக்தர்கள் பாடின பாட்டுகள், முதலிய புறச்சான்றுகளை யும் காட்டி, திருஞானசம்பந்த சுவாமிகளின் ஆதீனத்து பிரதம ஞானச்சாரியராய் விளங்கிய கண்ணுடையவள்ளலார் திருஞான சம்பந்தர் பேரில் இயற்றிய திருத்தாலாட்டி லுள்ள "புண்ணுரு நாறுதலைப் புன் சமண வஞ்சகரை, யெண்ணுயிரங் கழுவிலேற்ற வென்று வந்தாரோ" என்னும் தாலாட்டையும் காட்டினர்கள். அதற்குப்பின் சுவாமி வேதாசலம் ராயப்பேட்டை சைவ சங்கத்தில், கழுவேற்றின தைப்பற்றிச் சொல்லுகையில் நம்பியார் நம்பியும் சேக்கிழாரும் பெரிய புராணத்தில் பொய்யைப் புகுத்தி விட்டார்கள் என்று சொன்னர். அந்தச் சபையில் மணி. திருநாவுக்கரசு முதலியாருமிருந்தார். அதற்கொன்றும் பேசாமல் அதற்குப் பின் மணி. திருநாவுக்கரசு முதலியார் மற்ருெரு சைவ சபையில் வால்மீகியும் வியாசனும் அகத்தியரும் சேக்கிழாருக்கு ஒப்பல்ல வென்கிற பாட்டைச் சொல்லி அதற்கு அர்த்தமும் செய்தார். அதற்குப்பின் க. நமசிவாயமுதலியார், சாமவேதத்திலிருந்து சண்முகம் பிள்ளை இலக்கணம் வரையிலும் தேடினுலும் உண்மையான ஒரு அகஸ்தியனுமில்லை

என்றார். அதற்குப்பின் தமிழரசில் மணி. திருநாவுக்கரசு முதலியார் அகஸ்தியரைப் பற்றியும் அவரிலக்கணத்தைப் பற்றியும் எழுதி யிருக்கிறார். இவைகள் அனைத்தும் இப்பொழுது நடந்து இன்றும் பத்திரிகைகளில் இருப்பவைகள். இதில் திரு. கலியாணசுந்தர முதலியார் சுவாமி வேதாசலம் மணி. திருநாவுக்கரசு முதலியார் க. நமசிவாய முதலியார் இவர்கள் நான்கு பேர்களும் இலக்கண இலக்கியத்தில் தேர்ந்து தமிழ் நூல்களும் சமய சாஸ்திரங்களும் படித்தவர்கள் என்று ஜனங்கள் நினைப்பது போலவே நாங்களும் நினைக்கிறோம். இவர்களுக்குப் பிரமாணமாயிருந்த முன்னோர்கள் நூலென்ன? இவர்கள் இதில் எந்தெந்த நூலை யிகழாமல் விட்டிருக்கிறார்கள்? இதில் யார் சொல்லை நாங்கள் மகா மேருவாக மதிக்க வேண்டும்?

மணி. திருநாவுக்கரசு முதலியார் சுயமரியாதைக்காரர்கள் முன்னோர் நூலை இகழ்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். இவர் மனதில் கொண்ட நூல்களை சொல்லி விட்டால் இகழத் தகுந்ததா அல்லவா என்பதைத் தெரிந்து அவரைத் திருப்திபடுத்தி விடுவோம். "கற்றவர் சொல்லைத் துரும்பென மதிக்கின்றனர்" என்றும் எழுதி யிருக்கிறார். எந்த கற்றவர்களை, எதைக் கற்றவர்களை, அவர்களின் எந்த வார்த்தைகளைத் துரும்பென மதித்தோம் என்பதையும் விபரமாகச் சொல்லிவிட்டால் கற்றவர்கள் வருத்தத்திலிருந்து நாங்கள் தப்பித்துக் கொள்ளுவோம்.

சுயமரியாதைக்காரர்கள் பழைய நூலை எவ்வாறு குற்றம் சொல்லுகிறார்கள் என்பதை விளக்கிக் கீழே சிலதைச் சொல்லுகிறேன்.

சுவாமி மாணிக்கவாசகர் மகான், அவர் சொன்ன திருவாசகம் அநேக தத்துவார்த்தங்களையும் முழுமுதற் கடவுளையும் அடக்கிக் கொண்டிருக்கிறது என்பதிலும், அதற்கு யாரும் உரை செய்யப்படாது என்று சொல்லும் சைவப் பண்டிதர்கள் ஆட்சேபனையிலும், சிவபெருமான் சொன்ன ஆகம சுருதிகளுக்கும் பிர்மா சொன்ன வேத சுருதிகளுக்கும் விஷ்ணுவான வேதவியாசர் செய்த பிர்ம, சூத்திர சுருதிக்கும் பலர் அர்த்தம் செய்திருக்கையில் அக்கடவுளின் அடியார் செய்த சுருதிக்கு அர்த்த மெழுதினல் குற்றமென்னவென்று கேட்ட சில பண்டிதர்களின் அபிப்பிராயத்திலும், திருவாசகத்திற்கு நடராஜர் தான் அர்த்தம் என்று சொல்லி அவருடன் கலந்த மாணிக்கவாசக சுவாமிகளின் சரித்திர முடிவிலும் சுயமரியாதைக்காரர்கள் இகழ வந்தவர்களல்ல. பின் அதைப்பற்றி அவர்கள் சொல்லுவதாவது; முக்திக்கு ஓடுகையில் தன்கையிலுள்ள பொருள்களை தன்னுடையது, பிறருடையது என்று தெரியாமல் பக்தியின் மேலீட்டின் பரவசத்தால் கடவுளுக்கு உபயோகப்படச் செய்வது மாணிக்கவாசகருக்குப் பொருந்தும், முக்திக்கு ஓடி பக்தியில் பரவசப் பட்டவர்களுக்கு ஆகலாம். அவ்வழி நிற்பதற்கு ஆசை கொண்டு அதற்கு வேண்டிய அனுஷ்டான முடையவர்களுக்கும் மாணிக்கவாசகர் சரித்திரம் உபதேசிக்கலாம். ஆனல் குதிரை வாங்க ராஜா கொடுத்த பணத்திற்கு கோவில் கட்டின மாணிக்கவாசகா சரித்திரமும், அதற்காக நரியைப் பரியாக்கிப் பரியை நரியாக்கின பரமசிவன் உதவியையும் பள்ளிப் பிள்ளைகளுக்கு உபதேசித்தால் எவ்வாறு தங்கள் கடமை தெரிந்து சீரடை

வார்கள்? தாய் தந்தையர்கள் பிள்ளைகளை முக்திக்கு ஓடிப் போகவா பள்ளிக்கு அனுப்பியிருக்கிறார்கள்? மாணிக்க வாசகர் கதையை மாணுக்கர்கள் கேட்டு பள்ளிக்குக் கொடுக்கும் பணத்தை கோவில் கட்டி விட்டால் தாய் தந்தையர்கள் திருப்தி அடைந்து விடுவார்களா? தமது பிள்ளைகள் முக்திக்கு மாணிக்கவாசகருடன் போய்ச்சேரு வதற்கு பணத்தை யெல்லாம் கோவிலில் போட்டுவிட கற்றுக்கொள்ளட்டுமென்று தீவிரவாதிச் சைவர்கள் தான் நினைத்துக்கொண்டிருக்கிறார்களா? சென்னை பெரிய ஆஸ்பத்திரி பக்கத்து மாடியிலும் ஐகோர்ட்டு மாடியிலும், அதற்கடுத்த பக்கத்து மாடியிலும் உள்ள முக்தியை பிள்ளைகள் அடைவதையல்லவா தாய் தந்தையர் ஆசையாக எதிர் பார்க்கிறார்கள். குசேலரைப் போல 27 பிள்ளைகளையும் பிச்சை எடுக்க வளர்த்து பின் ஸ்ரீ கிருஷ்ணன் அருள் பெற்று செல்வவந்தர்களாகச் செய்துவிடலாமென நினைப்பார்களுமில்லை. அப்படி நினைத்தாலும் துவாரகையும் ஸ்ரீ கிருஷ்ண ராஜாவும் இப்பொழுதில்லை. ஆனதால் இப்பேர்ப்பட்ட கதைகளுக்கு, முன்னோர்கள் நூலும் உபயோக மில்லையென்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

குசேலர் என்பவர் பெரிய அரிபக்தர். நமது முன்னோர்களில் பெரியவர். இவர் உபாக்கியானம், பஜனை, படம், சரித்திரம் இத்தனையிலும் இவரைக் கொண்டாடி ஸ்ரீகிருஷ்ணனுடைய கருணையையும் போற்றுகிறார்கள். ஆனால் குசேலருக்கு 27 பிள்ளைகள் முதற் பிள்ளையிலிருந்து கடைசிப் பிள்ளைகள் வரையிலும் கணக்குப் பார்த்தால் மேஜரான பிள்ளைகளும் அதற்கு மேற்பட்ட பிள்ளைகளும்

ஒன்பதும் பலசரக்குக் கடையில் சேர்ந்தாலும் மாதம் ஐந்தாறு ரூபாயாவது கொண்டுவரும் பிள்ளைகள் ஐந்தாறு மிருக்கும். அப்படி இருந்தும் அவர் தரித்திரத்தைவிட தரித்திரம் வேறு எங்குமில்லை அவர் வாழ்க்கையில் தரித் திரத்தையே அனுபவிக்க நினைத்தார் என்றால் ஸ்ரீகிருஷ்ண னிடம் போகவும் அவர் பொருள் அளிக்கவும் அதனால் அவரும் அவர் குடும்பமும் சந்தோஷப்படவு மேதுவுமில்லை. இந்தக் கதை மாணுக்கர்களுக்குப் பாடமாக வைத்து உப தேசிப்பதில் பலனுமில்லை. அதுவுமல்லாமல் ஒரு தொழி லும் செய்யாமல் தெய்வத்தின் பேரைச்சொல்லிப் பிழைக் கும் பார்ப்பார்கள் குசேலரைப்போல இருப்பார்கள் என்று மற்றவர்கள் பார்ப்பார்களைக் கண்டவுடனே நினைத்து பகவானான ஸ்ரீ கிருஷ்ணனே பூசை செய்து அவர் பெண் சாதி கால் கழுவி இருக்கையில் நாம் செய்வது பெரிதல்ல வென்று நினைத்து அப்படியே செய்து அவர்களுக்கு வேண் டியதைக் கொடுக்க எழுதின தந்திரக்கதை என்றே நாங் கள் நினைக்கிறோம்.

பள்ளிப் பிள்ளைகளும் பரிகாசம் செய்கிறார்களே!

“கல்வி இல்லாதவர் பலர் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்திருத்தலால் கற்றாரைப் பழிப்பதே கருமமாகக் கொண்டுள்ளார்; அவர்கள் கற்றவர் சொல்லைத் துரும்பென மதிக்கின்றனர்; முன்னோர் நூலையும் இகழ்கின்றனர்; இவற்றையெல்லாம் இவர் பிரமாணமாகக் கொள்ளாத ஒன்றுமில்லாத இவர்கள் சொல்லை பிறர் எப்படி ஒப்புக்

கொள்ளுவார்களெனத் தெரியாமல் இருப்பது புல்லறிவின் வீக்கம் போலும்" என்று திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதின குறிப்பில் கண்டதற்கே இந்த வியாசமும் பதிலாக யிருக்கட்டும்.

திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதியிருக்கும் குறிப்பைப்போலவே பண்டிதர்களால் சுயமரியாதை இயக்க ஆரம்பத்திலிருந்தே குற்றம் சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு நான் பல வியாசங்கள் மூலமாக சத்தியத்தையும், நியாயத்தையும், சாஸ்திரத்தையும் ஆதாரமாகக் கொண்டு பல சமாதானங்கள் சொல்லி யிருக்கிறேன். அவற்றைப்பற்றின ஆட்சேபணைகளுக்கு சமாதானம் சொல்ல, எங்களைக் குற்றம் சொல்ல ஆசைகொண்ட பண்டிதர்கள் முன்வருவார்களானால் புல்லறிவின் வீக்கம் யாருக்கிருந்தாலும் அதை அறிவும் விருத்தியும் வேண்டிய உலகம் போக்கிவிடும்.

பண்டிதர், புலவர், வித்வான் என்றால் அறிஞர் அறிவைத் தெரிந்தவர்கள் புத்தியைக் கற்றவர்கள் என்பது பொருள். இது எல்லோருக்கும் தெரிந்தவையுமாகும். அப்படி யிருக்க அவர்களைத் தூஷிப்பதற்காக ஒரு பத்திரிகையும், அதற்கு ஆயிரக்கணக்கான சந்தாதாரர்களும், அதற்கு ஒரு இயக்கமும் ஊர் ஊராய்ப் பிரசங்கங்களும், மகாநாடுகளும் நடந்து வருமா? அதை ஆயிரக்கணக்கான ஜனங்களின் மனந்தான் ஒத்து ஆலோசனைதான் பண்ணுமா? புலவரென்றால் முக்காலுமுணர்ந்த தேவர்களுக்குச் சமமென்றும் அத்தேவர்களின் தலைவனான தேவேந்திரனுக்கும்

முதற்காரணமான முருகனுக்குமே அப்பெயர் உண்டென சொல்லப்படும் பெருமை பொருந்திய புலவர்களின் பண்டிதக் கல்வி மாதம் நாற்பது ரூபாய் விலைக்குக்கூட சவுதமாக விருப்பதற்குக் காரணமென்ன வென்பதைக் கண்டு பிடித்துக்கொள்ளவும் ஊண், உடை, குடியிருப்பு வசதிகளிலும் பழக்க வழக்கங்களும் மனப்பான்மைகளும் நமது ஜனங்களின் கவனத்தை இழுத்துச்செல்லும் தேச சமஷ்டியைக் கவனித்து படிப்பை உலகப் பொது விதியை உபதேசம் செய்ய உபயோகப்படுத்தி தாங்களும் சிந்தனை சக்தியுடையவர்களாய் வாழவும் வேண்டுமென்று பண்டிதர்களைச் சுயமரியாதைச் சங்கம் கேட்டுக்கொள்ளக் குற்றம் சொல்லுகிறதே யல்லாமல் பண்டிதர்களை இகழ்ந்து பழித்துப் பகைத்துக் கொள்ளவன்று.

"எது எது உங்களைச் சரீர விஷயமாகவும், புத்தி விஷயமாகவும் அத்தியாகம் ஞான விஷயமாகவும் பலயீனராக்குகின்றதோ அதை விஷமெனத் தள்ளுங்கள், அதில் உயிரில்லை. அது உண்மையாக விருக்க முடியாது. உண்மையானது பலனளிப்பதாம்" என்று சுவாமி விவேகாநந்தர் சொன்னது போல இத்தனை காலமாக நமது பண்டிதர்கள் கண்ட கல்வியான இதிகாச புராணங்கள் நமது சமூகங்களுக்கு நன்மையை உண்டாக்காமல் அடிமை வாழ்விலேயே புகுத்திவிட்டது. அந்த கல்வியின் சட்ட திட்டங்களாலும் சமயக்கொடுமைகளாலும் முன்னோர் சொன்னதென்று சொல்லும் காரணங்களாலும் மனித புத்தியை அபிவிருத்தியில் செல்லவிடாமல் அறிவின் வேரைக்கெடுத்து நல்ல பாதைகளையெல்லாம் அழித்து தெய்வத்தின் பெயரைச்

சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி பல நூற்றாண்டாக சம்பிரதாயத்தை ஒட்டியும், மூட பக்தியை ஒட்டியும் தகாத வெறுப்புகளும் அவற்றினும் கொடியதான உணர்ச்சியற்ற தன்மையும் நிறைந்து விட்டன. ஆனதால் அக்கல்வியும், அதைக் கற்று உபதேசம் செய்யும் பண்டிதர்களின் அறிவும் இக்கால நமது வாழ்க்கை இருபதாம் நூற்றாண்டின் நூதன சாஸ்திரீகர்களுடன் சம்மந்தம் கொண்டிருப்பதால் அதற்கு உபயோகப்படா தென்றே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறதே யல்லாமல் அறிஞர்களான பண்டிதர்களைக் குற்றஞ் சொல்லாது.

"சுயமரியாதைச் சங்கத்தவர்கள் முன்னோர் நூலை இகழ்கிறார்கள்; கற்றோர் சொல்லைத் துரும்பென மதிக்கிறார்கள்." என்று திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் சொல்லுகிறார். நமது பண்டித உபாத்தியாயர்களைத் தினமும் பள்ளிப் பிள்ளைகள் பரிகாசம் செய்வது திரு. முதலியார் அவர்களுக்கு அனுபோகந்தானே அது ஏன்? சுயமரியாதைக் காரர்கள் தான் படிப்பில்லாதவர்களானதினால் கற்றோர் சொல்லைத் துரும்பென மதிக்கிறார்கள். பள்ளிப்பிள்ளைகளேன் உபாத்தியாயரான பண்டிதர்கள் வார்த்தையைக் கேட்டவுடனே சொல்லையும், அவர்களையும் சேர்த்து நகைத்து கைகொட்டுகிறார்கள்? அதைப் பண்டித உபாத்தியாயர்கள் தெரிந்து கொண்டார்களானால் சுயமரியாதைச் சங்கம் சொல்லுவதை வெகு சுளுவில் தெரிந்து கொள்ளுவார்கள். அதைப்பற்றிச் சொல்ல வேண்டிய விஷயங்கள் அநேக மிருக்கின்றன. அவைகளில் ஒன்றைக் கீழே சொல்லுகிறேன்.

இராவணன் காலத்திலும் அதற்கு முன் வில்வலன் வாதாவி காலத்தும் அதற்கு முன் சூரபத்மன் காலத்தும் அதற்கு முன் திரிபுராதிகள் காலத்திலும் அகஸ்தியர் இருந்ததாக நமது முன்னோர்கள் நூல்கள் கூறுகின்றன. நமது பல ஸ்தலபுராணங்களில் பல ஸ்தலங்களை அகஸ்தியர் பூசித்தும் விஷ்ணுவை லிங்கமாக்கியும் போனதாகச் சொல்லப்படுகிறது. இராவணனுக்கு வயது ஐம்பது லட்சம் அதோடு அவனுக்கு முன்னிருந்த யுகக்கணக்குகளையும் கூட்டிப் பார்த்தால் அகஸ்தியருக்கு வயது கோடிக்கணக்காகும். அந்த அகஸ்தியர் சமீபத்தில் நமது ஸ்தலங்களைத் தெரிசித்துப் போனதாகவும், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடின ஸ்தல புராணத்தில் எழுந்தருளி இப்பொழுது போனவிடம் தெரியாமலிருந்தாலும் பண்டிதர்கள் ஸ்தல புராணங்கள் பாடுகையிலும் இலக்கண ஆராய்ச்சி சமயத்திலும் எப்படியாவது அகஸ்தியர் தோன்றிவிடுவார். அந்த அகஸ்தியரைப்பற்றியும், அவர் இலக்கணத்தைப்பற்றியும் அநேக காலமாக பண்டிதர்கள் தர்க்கித்தும், ஆராய்ச்சி செய்தும் அதில் ஒரு முடிவு மடையவில்லை. இவர்களுக்கெல்லாம் நமது முன்னோர்கள் நூலே பிரமாணம். ஆனால் ஒரு முன்னோர் நூலிலிருப்பதுபோல இன்னொரு நூலிவில்லை. அகஸ்தியருக்குச் சிவபெருமான் தமிழ் உபதேசித்தாரென்றும் முருகக்கடவுள் உபதேசித்தார் என்றும் சொல்லுவதற்கும் முன்னோர்கள் நூல்களே பிரமாணங்கள். முருகக்கடவுள் பிறப்பதற்கு முன்னும் மலையரசன் மகளைச் சிவபெருமான் மணப்பதற்கு முன்னும் அகஸ்தியர் தெற்கே யிருந்தாரென்பதற்கும் முன்னோர்கள் நூல்களே பிரமாணங்கள். இதில் நமது பண்டிதர் திரு. மணி. திருநாவுக்கரசு முதலி

யாருக்கு எந்த முன்னோர்கள் நூல்கள் பிரமாணமோ நாமறியோம்.

சிவபெருமான் மலையரசன் மகளைக் கலியாணம் செய்கையில் தேவர்கள் முனிவர்கள் பலரும் இமயகிரியில் திரண்டிருந்தமையால் பாரம் தாங்காது வடபுவி தாழ்ந்தும், தென்புவி உயர்ந்தும் போயிற்று. அப்பொழுது சிவபெருமான் அகஸ்தியரை தெற்கே போகும்படியாகச் சொல்ல அவர் அப்படிப் போயிருந்து பூமியின் ஏற்றத் தாழ்வை சமப்படுத்தினர் என்பது அவர் கதை. இதிலிருந்தே அதை ஆதாரமாகக் கொண்டு பண்டிதர்கள் ஆராய்ச்சிப் புறப்படுகிறது. இதற்கு கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், சைவப் பெரியாராகிய சிவஞான முனிவர் கூறிய காஞ்சிப் புராணம் முதலிய இன்னும் பல புராணங்களும் இதற்குப் பிரமாணம். இந்த முன்னோர்கள் நூல்களை பயபக்தியோடு எடுத்துக்கொண்டு போய் பள்ளிப்பையன்களிடம் தமிழ்ப்புலவரின் முதற்பெருமையைக்கூறப்போனல் பள்ளிப்பிள்ளைகள் பரிகாசம் செய்கிருர்கள். பிள்ளைகளுக்கு மூன்ரும் வகுப்பில் பூகோளம் ஆரம்பிக்கிருர்கள். பூகோள சாஸ்திரத்தையும், பூகோள படத்தை எழுதியும் படிக்கும் பிள்ளைகளும், படித்த பிள்ளைகளும், பூகோளத்தைப்படித்து மற்ற கோளங்களின் அமைப்பையும் தெரிந்து பூமியின் ஒரு திசையிலிருந்து புறப்பட்டால் அதே திசைக்கு வந்துவிடும் வகையையும் அறிந்து பூமி உருண்டையாக விருக்கிறதென்று அனுபோகப் படுத்திக்கொண்ட பிள்ளைகளும் சிரிக்கிருர்கள். "உருண்டையாக விருக்கும் பூமி எப்படி உயரும், தாழும்? இமயம் தான் பூமிக்கு வடக்கா? அதற்கு

வடக்கிலும் பூமி யிருப்பதாகத் தெரிகிறதே. இமயமும் பொதிகையும் பூமிக்கு இறுதிகளா? இமயத்தின் உச்சி லேறி மேனுட்டார்கள் அதன் உயரத்தைக் கண்டு பிடித்து விட்டார்களே! பொதிகையும் சர்வே ஆயிவிட்டதே! முனிவர்களேயும், அகஸ்தியரையும் அங்கு கண்டதாகச் சொல்ல வில்லையே'' என்று பிள்ளைகள் கேட்டுவிட்டால் பிள்ளைகள் நம்மை அலட்சியப் படுத்துகிறார்கள் என்று தலைமை உபாத்தியாயரிடம் சொல்லி சமய ஒழுக்கம் போய்விட்டது, முன்னோர் நூலை மதிப்பதில்லை, பெரியவர்களின் பேரி லிருந்த பக்தி குறைந்து விட்டது, தமிழுக்கே பெருமை குறைந்து விட்டது, சுயமரியாதை இயக்கத்தை தொலைத்தேதத் ஆகவேண்டும், கடவுளே இல்லை யென்கிறார்கள், ஆயிரம் பேர் சொன்னாலும் நான் தெய்வத்தின் பேரில் கொண்ட பக்தியைப் போக்க முடியாது என்று பண்டிதர்கள் வருத் தப்படுகிறார்கள்.

பூகோள சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுக்கும் உபாத்தி யாயர் பூகோள சாஸ்திரத்தைக் கொண்டும் இதுவரையிலும் கண்டு பிடிக்கப்பட்ட அனுபோகத்தைக் கொண்டும் படம் போட்டு பூமியைப்பற்றிச் சொல்லிக் கொடுக்கவும் நமது பண்டிதர்களே ''சிவபெருமான் மலையரையன் பாவையா ரைத் திருமணம் புரிதருகாலத்தே தேவர் முனிவர் பல் கணத் தாரும் இமயத்தில் திரண்டிருந்தமையின் பொறையாற்றாது வடபுவி தாழ்ந்து, தென்புவி உயர்ந்து அப்பொழுது இறை வர் அகத்தியரை தெற்கின்கண் பொதியிலீற் சென்றிருக்கு மாறு வேண்டிக்கொள்ள அவரும் அங்ஙனமே போந்திருந் தனர். புவியும் துலையொத்தது'' என்னும் இலக்கிய இலக்

கணப் பதம் தவராது பிள்ளைகளுக்குச் சொல்லி அவர்கள் கொண்ட சங்கைக்கு கந்தபுராணத்தையும், திருவிளையாடற் புராணத்தையும் மேற்கோள் காட்டிவிட்டால் பிள்ளைகளுக்கு என்ன பிரயோஜனம்? அவர்கள் புத்திதான் எப்படித் திருப்தியடையும்.

பின்னொரு காலத்தில் "நாரதர் சூழ்ச்சியால் விந்தமலையானது மேருமலையுடன் சண்டைபோட மேலெழுந்து வானத்தில் வழியெல்லாம் அடைத்து விட்டது. அப்பொழுது சூரியன், சந்திரன் இன்னுமுள்ள கோளங்களெல்லாம் ஓட வழியில்லாமல் நெருக்குண்டது. அப்பொழுது மேருவில் தவம் செய்து கொண்டிருந்த முனிவர்கள் அகஸ்தியரிடம் முறையிட அகஸ்தியர் விந்தமலையை அழுத்தி அதன் ஆற்றலை ஒடுக்கி வானவர்களையும், சந்திர சூரியர்களையும் இறைவன் அருள்பெற்று இரட்சித்தார்" என்னும் முதற் புலவர் பெருமையைப் பண்டிதர்கள் பிள்ளைகளுக்குச் சொல்லுகையில் பூமிக்கும், சூரியன், சந்திரன், மற்ற கிரகங்களுக்குமுள்ள தூரம், பூமியின் அளவு, அதிலுள்ள மலைகளின் பருமன், கணக்கிலடங்காத ஆகாசவெளி முதலியவைகளின் விபரங்கள் தெரிந்த பிள்ளைகள் பள்ளிப் பண்டிதர்களின் பருமனை அறிவைக்கண்டு பரிகாசம் செய்யாமலிருக்க அவர்கள் மனம் எப்படி சம்மதிக்கும்?

"அகஸ்தியர் தென்னாடு வருகையில் இமயத்திலுள்ள கங்கையின் வீடுசென்று காவிரியை வாங்கி கமண்டலத்தில் அடைத்து பொதிகை கொண்டுவந்து விநாயகர் அருள் பெற்று கமண்டலத்திலுள்ள காவிரியை ஊற்றினார். அது காவிரியாக தென்னாட்டில் புண்ணிய தீர்த்தமாக விளங்கு

கிறது" என்று காவிரியின் உற்பவம் தெரிந்திருக்கும் பள்ளிப் பண்டிதர்கள் பிள்ளைகளுக்கு நதியின் உற்பவங்களை எடுத்துச் சொல்லுகையில் பிள்ளைகளுக்குப் பெருந் தொந்திரவாக முடிகிறது. பூகோள சாஸ்திர உபாத்தியாயர் சொல்வதை கேட்காவிட்டால் பூமி, அதிலுள்ள மலை, நதிகள் முதலியவைகளின் வரலாறுகளின் தன்மைகள் தெரியாமல் போய்விடுகிறது. பள்ளிப் பண்டிதர்கள் சொல்வதைக் கேட்காவிட்டால் முன்னோர்கள் நூலை இகழ்ந்த குற்றமும், அதை கற்றவர்கள் சொல்லைத் துரும்பென மதித்த குற்றமும் வந்துவிடுகிறது. இதில் எந்த குற்றத்தை ஏற்றுக்கொண்டால் புத்திக்கு ஒத்ததாக விருக்கும், உலகத்திற்கும் பயன்படும் என்பதைப் பண்டிதர்களே சொல்லிவிடட்டும்.

அகஸ்தியர் தெற்கே வருகையில் தென் தேசத்தவர்கள் தமிழ்க்கல்வி மிக்காராக விருப்பதால் அவர்கள் கேட்பதற்கு விடைகூற வேண்டுமாதலின் தமிழ் இலக்கணத்தை உபதேசம் செய்ய வேண்டுமென்று அகஸ்தியர் சிவபெருமானிடம் கேட்டு சிவபெருமான் உபதேசித்த இலக்கணத்தையே ஒரு நூலாகச் செய்தார் என்பது கதை. சிவபெருமானிடம் கேட்டு அகஸ்தியர் செய்த இலக்கணமும் இப்பொழுதில்லை என்றும், அந்த இலக்கணமே முதலிலக்கணமென்று சிலரும், அவ்வித இலக்கணமில்லையென்று சிலரும், இப்பொழுதில்லாவிட்டாலும் பல முன்னோர் நூல்களில் அகத்திய மிருந்ததாகக் கூறுதலினால் அது இருந்ததென்றே கொள்ள வேண்டுமென்று சிலரும் தென் தேசத்தில் தமிழ் கல்வி மிக்காரிடம் சொல்லுவதால் சிவபெருமா

னிடம் இலக்கணம் கேட்டு வந்தார் என்று அவர் கதை சொல்லுவதால் இல்லாத அகஸ்திய இலக்கணம் முதநூ லெப்படி ஆகுமென்று சிலரும், அகஸ்தியரே தமிழ் செய்தா ரென்று சிலரும், சிவபெருமானிடம் கேட்டுச் செய்தார் என்று சிலரும் அகஸ்தியருக்குமுன் கொடுந்தமிழ் இருந் தது அகஸ்தியர் செந்தமிழ் செய்தாரென்று சிலரும், அகஸ் தியர் வடமொழியாளரிடம் மாறுபட்டு அம்மொழிக் கிணை யான மற்றொன்றை யருளுமாறு முருகக்கடவுளை வேண்ட முருகன் பல ஏடுச்சுவடிகளைக் காட்ட அந்த ஓலைச்சுவடி களை வாரிக்கொண்டு அகஸ்தியர் தமிழ் மொழியை இவ்வுல கில் நிலவச் செய்தார் என்று சிலரும், இன்னும் அகஸ்தி யரைப்பற்றி வலவாறுகப் பண்டிதர்கள் சொன்னதையே படித்ததையே தினமும் தர்க்கம் பண்ணுவார்கள். இதற் கெல்லாம் எல்லோரும் முன்னோர்கள் நூலே பிரமாணம். இதில் நமது பண்டிதர் திருமணித் திருநாவுக்கரசு முதலி யார் எந்த முன்னோர் நூலை ஏற்றுக்கொண்டிருக்கிறார், எந்த முன்னோர் நூலை இகழாமலிருக்கிறார் யென்பதைப் பின்னால் தெரிந்து கொள்வோம்.

சென்னையில் படித்தவர்கள் கூட்டத்தில் பண்டிதர்கள் பக்கத்தில் உண்மையான ஒரு அகஸ்தியன் இல்லையென் பதற்கு வேதத்திலிருந்து புராணம் வரையிலும் பிரமாணம் சொன்ன, கா. நமசிவாய முதலியார் எத்தனை முன்னோர் நூல்களைத் தள்ளிவிட்டார் என்பது தெரியுமா? பச்சையப் பன் கலாசாலையைவிட சென்னை ராஜதானி கலாசாலை சிறந்ததல்லவே.

அகஸ்தியர் இலக்கணம் இல்லாமல் போனதற்குச்

சொல்லும் காரணங்கள் முக்கியமான தொன்றைச் சொல்லி அகஸ்தியர் கதையை இப்பொழுது நிருத்துவோம். அகஸ்தியருக்கு திரணதூமாக்கினி என்று ஒரு மாணுக்கரிருந்தார். புலத்தியன் என்னும் பெயரை திரணதூமாக்கினி என்று வடமொழிப் பெயராக மாற்றப்பட்டிருக்கிறதென்றும் சொல்லுவார்கள். ஊருக்குப் போயிருந்த அகஸ்தியர் பெண்ஜாதியைக் கூட்டிக்கொண்டு வரும்படியாக திரணதூமாக்கினியை அனுப்பினுர். அனுப்புகையில் பெண்ஜாதியை கைபடாமல் கூட்டி வரும்படியாக அகஸ்தியர் உத்தரவிட்டார். திரணதூமாக்கினி அகஸ்தியர் பெண்ஜாதியை கூட்டி வருகையில் வழியில் ஆறு குறுக்கிட அதிலிரங்கி வருகையில் வெள்ளப் பெருக்கு வந்து அகஸ்தியர் பெண்ஜாதியை அடித்துக்கொண்டு போகும் தருணம், குருவின் ஆக்கினை தொடப்படாதென்று சொல்லியிருக்கிறதே; ஆற்றின் பிரவாகத்தில் குருபத்தினியோ அகப்பட்டுக் கொண்டார்களே; என்ன செய்வதென்று ஆலோசித்து ஒரு கோலை நீட்டி கரை சேர்த்து அகஸ்தியரிடம்வந்து நடந்த சங்கதியைச் சொல்ல அகஸ்தியருக்குக் கோபம் வந்து சாபம் கொடுத்தார். அதைக்கேட்ட மாணவனுக்கும் கோபம் வந்து:நீ சொன்ன இலக்கணம் இல்லாமல் போகக்கடவதுயென்று சாபம் கொடுத்தார். அதனுலே அகஸ்தியர் இலக்கணம் இல்லாமல் போய்விட்டதாம். இந்த வரலாறு தொல்காப்பிய உரையாசிரியர் எழுதின பாயிரத்திலிருப்பதாகப் பண்டிதர்கள் சொல்லக் கேட்டதுண்டு.

திரணதூமாக்கினியோ சிவபெருமானுக்குச் சமமான அகஸ்தியரின் மாணுக்கன் மகா பண்டிதன். அகஸ்தியர்

பத்தினியோ மகா பதிவிரதை. இவர்கள் பேரில் குற்றமே நினைக்க ஏதுவில்லை. கைபடாமல் கூட்டிவரச் சொன்னதே அபத்தம். உயர்ந்து போகும் தென் கோட்டைசமப்படுத்தியும், கமண்டலத்தில் காவிரியைக் கொண்டுவந்தும், சமுத்திரத்தைக் குடித்தும், விஷ்ணுவைக் குழைய வைத்து லிங்கமாக்கியும், ஆகாசத்தில் எழும்பி சந்திரன், சூரியனை ஓடாமல் ஆகாசமெல்லாம் மூடிக்கொண்ட விந்தமலையை அடக்கி இன்னும் எத்தனையோ அறபுதங்களைச் செய்த அகஸ்தியருக்கு குருபத்தினியைத் தொட்டால் தோஷமென்று தன் முதல் மாணுக்கனுக்கு உபதேசம் செய்யவில்லையே? அகஸ்தியருக்கு வயது கோடிக்குமேலாகிறது. அவர் பெண் ஜாதிக்கு அதற்குச் சமமான வயது இருக்கவேண்டுமே, இத்தனை வயதாகியும் இனியுமா சந்தேகம் நீங்கவில்லை? ஆற்றில் அடித்துக்கொண்டு போகையில் அபத்தம் சொன்ன குருவின் வார்த்தையை அலட்சியப்படுத்தாமல் கோலை நீட்டி கரை சேர்த்த சிஷ்யனுக்கு சாபம் கொடுக்கும் குருவின் நியாயம் அதிசூட்சமானது போலும்! இந்தக் கதையைப் பள்ளிப் பண்டிதர்கள் மாணுக்கர்களுக்கு சொல்லுவதால் மாணுக்கர்கள் தெரிந்து கொள்ளும் விஷயமென்ன? கடமையாது? நம்மையும், நமது நாட்டையும் கெடுத்ததே. அகஸ்தியர் கதை அதைவிடக் கெடுத்தது. வடகோடு தாழ்ந்து, தென்கோடு உயர்ந்து அதை சமப்படுத்த அகஸ்தியர் வந்து அமர்ந்தார் என்பதை ஆலோசனை செய்யாமல் அதையே அஸ்திவாரமாகக்கொண்டு பண்டிதர்கள் அகஸ்தியர் கதையைப் பெருக்கிக்கொண்டு போனதே அதை விடக் கெடுத்தது. அவர்கள் தான் என் செய்வார்கள்! அவர்கள் படிக்கும் புஸ்தகங்களிலெல்லாம் அகஸ்தியர் இருக்

கிறார். அகஸ்தியனைவிட வழியுமில்லை. அகஸ்தியனைப்பற்றி இந்த வியாசத்தில் ஏன் எழுதினேன் என்றால் அகஸ்தியன் கதைகளிலேதான் பார்ப்பானின் மோசடி அத்தனையும் காட்டப்பட்டு அனுபோகமா யிருக்கிறது. அகஸ்தியரே தான் பண்டிதர்கள் படித்திருக்கும் தமிழுக்கும் அதிகாரியா யிருக்கிறான்.

தென்தேசம் உயர்ந்தது வாஸ்தவம் தான்; அதற்காக அதைப் பார்ப்பனர்கள் தாழ்த்தினதும் உண்மைதான் அதுவே நிஜமல்லாது பூமியின் கோடு உயர்வதும், தாழ்வது முண்டா? பூமிக்கு எதுதான்கோடு?

நமது முன்னோர்கள் நாலாயிரமுளம்.

சுயமரியாதை இயக்கமும், அதைப் பிரசுரிக்கும் குடி அரசுப் பத்திரிகையும், அதன் ஆசிரியரும், உலகப் பொது விதியே உண்மை எனக்கொண்ட பல புத்திமான்களும், நமது சமூகம் குருக்கள் கட்டுப்பாடென்னும் மிகச்சிறிய ஏற்பாட்டிற்கும் பிரயோஜனமற்ற பழைய சாஸ்திர கட்டளைக்கும், முழந்தாள் படியிட்டு ஆண்மை யிழந்து, அறிவு குன்றிப் போகிறார்கள் என்பதை உணர்ந்த பல வாலிபர்களும் சுயமரியாதைச் சங்கத்தின் உண்மைகளை பிரசங்கம் செய்தும் எழுதியும் வருகிறார்கள். இதற்கு மத்தியில் நானும் சில நாளாக வியாசங்கள் எழுதியும் வருகிறேன். அவைகள் உலகப் பொது விதிக்கும், நியாயத்திற்கும், மனிதனுக்கு வேண்டிய முற்போக்கிற்கும் ஒத்தவைகளாக

175857

யில்லாதிருந்தால், அதை விபரப்படுத்திச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அவர்களின் புல்லறிவின் வீக்கத்தை உலகம் தெரிந்து கொள்ளும். அதை விட்டுவிட்டு சுயமரியாதை இயக்கத்தில் கல்வி யில்லாதவர்கள் பலர் சேர்ந்திருத்தலால் கற்றுரைப் பழிப்பதே கருமமாகக் கொண்டுள்ளார்கள். அவர்கள் கற்றவர் சொல்லை துரும்பென மதிக்கின்றனர். முன்னோர் நூலையும் இகழ்கின்றனர். இவற்றை யெல்லாம் இவர் பிரமாணமாகக் கொள்ளாத போது ஒன்றுமில்லாத இவர்கள் சொல்லைப் பிறர் எப்படி ஒப்புக்கொள்ளுவார்களெனத் தெரியாமல் இருப்பது புல்லறிவின் வீக்கம்போலும் என்று எழுதி விடுவது சுளுவானாலும் அது விஷயத்திற்குப் பொருந்துமா? அதைக் கேட்ட மாத்திரத்திலே சுயமரியாதைக்காரர்கள் எந்த முன்னோர் நூலை இகழ்ந்தார்கள்? அது என்? இகழ்ந்ததற்குக் காரணமென்ன? எந்தக் காரணத்தைக்காட்டி இகழ்ந்தார்கள்? எந்தக் கற்றவர்கள் வார்த்தையைத் துரும்பென மதித்தார்கள்? அதற்குக் காரணமென்ன? ஒன்றுமே ஆலோசிக்காமல் சுயமரியாதை இயக்கத்தை உலகம் தள்ளி விடுமா? அப்படியானால் மனிதனின் புத்திக்குப் பெருமைதானென்ன? மனிதன் சகல ஜந்துக்களிலும் மேலான ஜந்து என்று சொல்லுவதற்கு அவன் புத்தியின் முக்கிய பாகமான சிந்தனை சக்திதானே காரணம். அந்த சக்தி நமது சமூகங்களில் புகுந்து வருவதை நாம் பார்க்கவில்லையா? பழைய சம்பிரதாயங்களெல்லாம் தற்கால ஏற்பாட்டிற்கும், மாறிய சந்தர்ப்பத்திற்கும் தாராளமாய் மாறிக்கொண்டிருக்கிற ஜனங்களின் மத்தியிலிருந்து சுயமரியாதைக்காரர்களை எப்படித் தள்ள முடியும். தெளிவான யோசனையும்

பெருந்தகையுடைய உள்ளமும், நேர் நடையுமுடையவர்களாய் உள்ள உத்தமர்களும், விதிகளும், சம்பரதாயங்களும் சேர்ந்த பழைய கர்மகாண்டமானது நமது தேச ஜனங்களின் சக்தியை சப்பி விட்டது. ஆதலால் சந்தர்ப்பங்களுக்குத் தகுந்தாப்போல நிலைமையை ஒழுங்குபடுத்திக் கொள்ளவேண்டிய கல்வியை நமது ஜனங்களடைய வேண்டுமென்று சொல்லும் கற்ருரும் நமது நாட்டில் பெருகிக்கொண்டு வருகையில் சுயமரியாதை இயக்கத்தில் புல்லறிவின் வீக்கம் தங்க இடமில்லை. சென்ற காலப் புழுதியும், சருகும், சாதிப்பெருமையும், சமயக் கொடுமையும், அதில் தன்னலமும் சேர்ந்த ஆசையும் இவைகளுக்கு அனுகூலிக்கும் பிரயோஜனமற்ற சாஸ்திரப் பொய்களும் சேர்ந்து கற்ற கல்வியைக்கொண்டு புதிய உதயத்தை மறைக்கப் புறப்படும் புல்லறிவின் வீக்கத்தைப் போக்குவதற்கே சுயமரியாதை இயக்கம் தோன்றிற்று.

கல்வி கற்றவர்கள் வேலை யெல்லாம் முன்னேயிருக்க பின்னேக்க வழியிலேயே சிருஷ்டியைச் செலுத்தி பண்டிதர்கள் சொல்லும் விஷயங்களுக்கெல்லாம் முன்னேர்கள் சாஸ்திரமென்றும், அதிலிருக்கும் பிரமாணமென்றும் ஆதாரம் காட்ட எதிர் கட்சிப் பண்டிதர்களும் அவ்வழியே ஆதாரம் காட்டப் பிரயத்தனம் செய்து பாதையினின்றும் விலகி வார்த்தைகளாகிய காய்ந்து போனதைக் கடிக்கப் பிரயத்தனம் செய்து தாங்கள் கற்ற கல்வியை அதற்கே உபயோகப்படுத்தி அதற்கும் ஒரு புஸ்தகமெழுதி அது அதற்குப் பின்வந்த பண்டிதர்களுக்கு முன்னேர் நூலும் பிரமாணமுமாகி அதற்கும் தர்க்கமும், சண்டையும் போட்டு

வந்த கல்வியைக் கற்றவர்களால் நமது நாட்டிற்கு வந்த நன்மை என்ன? உலகத்தில் சுயமான அனுபவமே சிறந்த பிரமாணமாக விருக்க சுய அனுபவத்தில் விளங்கும் உண்மை களுக்கெல்லாம் உலகம் காட்டும் ஒளியைப் புதருக்குள் ஒளித்துவிட்டு எதற்கும் முன்னோர் நூலே பிரமாணமாகக் கொள்ள வேண்டுமென்று மணி. திருநாவுக்கரசு முதலியார் சொல்லுவதற்கு ஞாயமில்லை. முருக்கும் பணியாரமும் வெல்லப்பாவில் கடலையை உண்டை பண்ணின மிட்டாயும் நமக்கு முன்னோர் நூல் பப்பிரமெண்டும் சாக்லட்டும் பிஸ் கொத்தும் நமது குழந்தைகளுக்குப் பிரியமாகக் கொடுப்ப தற்கு எந்த முன்னோர் நூல் பிரமாணம்? முற்காலத்தில் விளங்கிய பக்தர்களுடைய கதை, காவியங்களின் சிருஷ்டி யில் நமது வாழ்க்கையைக் கவனித்தால் நமக்கு ஒளியைத் தருமா? நாமே அறிவு பெற்றுப்பார்க்க வேண்டுமென்பதில் குற்றமென்ன?

இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்ட பிரகிருதியின் சக்திகளெல்லாம் ஏசு கிறிஸ்தவ வேதத்திலிருந்தும் அவர் சிஷ்யர்கள் சொன்ன வாக்கியத்திலிருந்தும் அவர்களுக்கு முன்னோர்களான யூதர்கள் புஸ்தகங்களிலிருந்துமா கண்டு பிடிக்கப்பட்டது? ரப்பர் மரமிருக்கிறது அதன் பாலை எடுத்து மோட்டார் சக்கரத்திற்குக் கவசமாகப் போட்டும், பூமிக்குள் பெட்ரோலிருக்கிறது அதை எடுத்து மோட்டார் வண்டிக்கு ஊற்றி தினமும் 1500 வண்டி செய்து உலக மெல்லாம் அனுப்பி பணக்காரனிலும் பணக்காரனு வாழென்று போர்டு துரைக்கும் அந்த வண்டியை வாங்கி சௌக்கியமாக சவாரி செய்யுங்களென்று ஜனங்களுக்கும்

எந்த முன்னோர்கள் சொல்லிப் போனார்கள்? இவை எப்படி கற்றவர்கட்கும், அறிவிற்கும், ஜனங்களுக்கும் அவசிய மாயிற்று? இதற்கு ஆதாரமாக எந்த முன்னோர்கள் நூலைப் பிரமாணமாகக் கொண்டு திருப்தி அடைந்தார்கள்?

பழைய வழக்கங்களாகிய சுவர்களை ஒரே இரவில் இடித்துத்தள்ளி ஜப்பான் வெற்றிகோலம் பூண்டு நிற்பதை ஒருநாட் காலையில் எழுந்தவுடன் உலக முழுதும் பார்த்து வியப்பெய்ததற்குக் காரணம் யாது? இவ்வுலகம் உயிருடைய தென்றும் இதனுள்ளே ஒரு ஆத்மா ததும்புகிறதென்றும் இது வெறுமே யதிர்ட்சை என்றும் பெரிய பேயினாலோ அல்லது காரணமாத்திரமாக எங்கோ தொலைக்கெட்டிய வானமொன்றில் மறைந்து கிடக்கும் தேவனாலோ செய்து விடப்பட்ட இயந்திரமல்லவென்றும் விளங்கிய பயிற்சியினா லல்லவா? தன்னலங்கருதும் சமய வாதிகளின் மனதில் திரளும் சாஸ்திரக் குப்பைகளையும், சட்ட திட்டங்களான வழக்கச் சிறகுகளையும் உடைத்து வெளியேறின தைரியத்தி னாலல்லவா? இளமை தருகின்ற காலவெள்ளத்தில் நிர்வாணமாக முழுகி எழவேண்டும். செத்ததைப் பின்னும் அடைக்கலம் புகுதல் சாதலேயாம் என்பதை உணர்ந்து கொண்டமையாலல்லவா? ஜப்பான் உலகத்தில் தன்னையும் மனிதன் மதிக்க மனிதனாக்கிக் கொண்டது.

பரிசுத்தமும், வல்லமையும் பொருந்திய கல்வியானது சர்வ சக்தியுள்ளதாகும். அக்கல்வியை உடையவர்களின் வார்த்தையானது உலகத்தில் எந்த காரியத்தையும் செய்யும் திறமுடையதென்றும், சுயமரியாதை இயக்கத்தவர் களுக்குத் தெரியும். அக்கல்வியோ அக்கல்வியுடையாரின்

சொல்லையோ துரும்பென மதிக்கும் புல்லறிவின் வீக்கம் எந்த காரணத்தாலும் சுயமரியாதை இயக்கத்தில் குடியிருக்கக் காரணமேயில்லை. பல நூற்றாண்டுகளாக நீச்சத் தன்மையான கோட்பாடுகளையுடைய கல்வியே ஜனங்களுக்குப் புகட்டப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு யாதொரு அதிகாரமாவது பாத்திதையாவது இல்லையென்று உபதேசமா யிருக்கின்றது. நமது நாட்டிலுள்ள பல ஜனங்களைப் பார்த்து மற்றவர்கள் நீங்கள் மனிதப் பிரஜைகளல்லீர் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். இப்படிப் பல நூற்றாண்டு அவர்கள் சாஸ்திரமென்றும், சமயமென்றும் பயமுறுத்தப்பட்டு வந்து கடைசியில் மிருகப்பிராயராய் விட்டனர். ஆத்மாவைப்பற்றியோ, உலகத்தைப்பற்றியோ அவர்கள் தெரிந்துகொள்ள உயர்ந்த ஜாதியென்பவர்களும், சமயப் பற்றுடையவர்களும் இடம் கொடுக்கவில்லை இவர்களுக்கு ஆதாரமாகவே பண்டிதர்களும் பழைய ஏற்பாட்டைப் பார்த்து அவர்கள் கொண்ட கருத்திற்குத் தகுந்தவாறு பிரமாணம் கூறிக்கொண்டிருந்தார்கள். அவ்விதமான முன்னோர் நூலும் அதைப் பிரமாணமாகக் கொண்ட பண்டிதவார்த்தையும் சமூகங்களை அடிமை வாழ்வில் கொண்டுபோய்ச் சேர்த்தது உண்மையானது பலனளிக்க வேண்டும். இத்தனை காலமாக நாம் கண்ட கல்வியான ஆகம இதிகாச புராண மந்திரங்கள் மனிதனைத் தீட்டுடையவனென்றும், அடிமையென்றும் தீர்மானிக்கச் சக்தியிருந்ததே யல்லாமல் தீட்டைப் போக்கும் சக்தி யதனிடமில்லை. மகமதியக் கல்வி அவர்கள் தொப்பி ஒன்று அணிவதிலும், கிறிஸ்துவக்கல்வி ஒரு அவுன்ஸ் தண்ணீரிலும் எந்தத் தீட்டையும் சுத்திகரித்து மனிதனாக்கி

விடுகிறது பார்த்தீர்களா அவர்கள் முன்னோர் நூலின் மகுத்துவம்.

ரிஷிகளும், சித்தர்களும் நமது முன்னோர்கள் அவர்கள் சொன்னதும் அதை ஆதாரமாகக் கொண்டும், அவர்கள் பேர் கொண்டும் எழுதியவைகளே முன்னோர்கள் நூல். சில சந்தேகங்களை நிவர்த்திக்க வசிஷ்டர் ராமரை புசுண்ட மகாரிஷியண்டை கூட்டிப் போனதாகவும், அந்த ரிஷி நீங்கள் யார் என்று கேட்கவும் நான் வசிஷ்டன் இவன் விஷ்ணுவின் அவதாரமான ராமன் என்று சொல்லவும் நீ எந்த வசிஷ்டன், இவன் எத்தனாவது ராம அவதாரம் என்று புசுண்டமகாரிஷி கேட்டதாகவும் ராமருக்கு வசிஷ்டர் உபதேசித்த ஞானவாசிஷ்டத்தில் புசுண்டர் கதை யாலும் ஒரு ரோமம் உதிர்ந்தால் ஒரு பிர்மா இறப்பார் அப்படி மூன்றரைக்கோடி பிர்மா இறந்தால் என்னுடைய மூன்றரைக்கோடி ரோமமும் உதிரும் அப்பொழுது நான் இறப்பேன் என்று தேவேந்திரனிடம் சொன்ன ரோமரிஷி யும் அந்த ஒரு ரோமரிஷி இறந்தால் என் கோணத்தில் ஒன்று நிமிரும் அப்படி என்னுடைய எட்டு கோணமும் நிமிர்வதற்கு எட்டு ரோமரிஷி இறக்க வேண்டும் அப் பொழுது எனது ஆயுசு முடிவென்று சொல்லி தேவேந் திரனின் சந்தேகத்தைப் போக்கின அஷ்டகோண மகா ரிஷியின் கதையும் ஆலோசித்தால் நம்மால் கண்டு பிடிக்க முடியாத தொலை தூரத்தில் நமது முன்னோர்களின் கால மிருக்கிறது. சிருஷ்டியானது அடி முடியற்று அனாதி நித்தியமாய் எப்படி விளங்குகிறதோ அது போல நமது முன்னோர்களுக்கும் அடியு முடியுமில்லை. அந்த முன்னோர்

களை யெல்லாம் நமது அனுபோகத்திற்குக் கொண்டுவந்து நம் வாழ்க்கைக்குச் சரிப்படுத்திக் கொள்ளுவது வீண் வேலையும் அவசியமில்லாத காரியமுமாகும். அதாவது நமது பண்டிதர் மணி. திருநாவுக்கரசு முதலியார் நட்பை ஒட்டி நாமெல்லாம் சேர்ந்து முன்னோர்களை கொண்டுவந்தாலும் அவர்கள் இப்பொழுது காணும் ரயில், மோட்டார் டிராம், கம்பியில்லாத் தந்தி முதலியவைகளைப் பார்த்து ஆச்சரியத்தால் பின்னுமொரு தரம் இறந்து போவார்கள். அல்லது வெட்கப்பட்டு ஓடிப்போனாலும் போவார்கள் ஆனதால் அதிலும் பிரயோஜனமில்லை.

ஆதியுகம் இரண்யன் காலமான நரசிம்ம மூர்த்தி அவதாரத்தில் நாலாயிரமுழமுள்ள மனிதர்களும் இரண்டாவது யுகமான ராம அவதாரத்தில் நானூறுமுழ நீளமுள்ள மனிதர்களும் மூன்றாவது யுகமான கிருஷ்ண அவதாரத்தில் நாற்பது முழ மனிதர்களும் இருந்தார்கள் கலிக்கி அவதாரமான இந்த நாலாவது யுகத்தில் நாலுமுழ மனிதர்களிருக்கிறார்கள் என்பதற்கு நமது முன்னோர் நூலில் காணும் கதைகளாலும் நமது பெரியவர்களான பாட்டன் பாட்டிமார்கள் சொல்லிப் போயிருக்கிற கதைகளாலும் தெரிய வருகிறது. நாலாயிரமுழ நீளமுள்ள மனிதர்கள் இருந்த காலத்தில் அவர்களைவிட பலமும், பருமனுமுடைய மனிதர்கள் இருந்ததாகவும் அவர்களில் இரணியனுக்கு இமயமலையும் விந்தியகிரியும் காது குண்டலங்களாகவும் மகாமேருவைத்தடியாக விருந்ததாகவும் நமது முன்னோர் நூல்கள் கூறுகின்றன. அந்தக் காலத்தில் இந்த மலைகளின் அளவு இவ்வளவோ இவ்வளவுதானா அதைப்பற்றின

விவகாரம் பழைய நூல் பிரமாணத்தில் போதிய ஞான முடையவர்களிடம் தான் தெரிய வேண்டும். காதின் கன மும், தோளின் நீளமும், வீட்டின் அளவும், ரோட்டின் பரப்பும், பிரகலாத ஆழ்வாருடைய தாயாரின் முகத்தின் விலாசமும் தெரிவதற்கு ஆராய்ச்சி செய்ய வேண்டிய தில்லை. நாலாயிரமுள மனிதனுக்குத் தகுந்தவாறு அந்தக் காலத்து ஏற்பாடு அமைந்திருக்கலாம். நாலாயிரமுள நீள முள்ள மனிதனின் ஊண், உடை, குடியிருப்பு முதலிய எல்லாவித ஏற்பர்டுகளும் நானூறுமுழ நீளமுள்ள மனி தனுக்கு ஒத்துவராது. அதுபோலவே நானூறுமுள நீள முள்ள மனிதனின் ஏற்பாடு நாற்பது முளமுள்ள மனித னுக்கும் நாற்பது முளமுள்ள மனிதனின் ஏற்பாடு நாலுமுள முள்ள மனிதனுக்கும் ஒத்துவராது. இது எல்லோருக்கும் தெரியக்கூடியதுமாகும். ஆனுல் அகஸ்தியர் மட்டும் பெரு விரல் பிரமாணமாக அவர்களுடனிருந்து சண்டைபோட்ட தாக அநேக முன்னோர் நூல் பிரமாணங்கள் சொல்லுகின் றன. நாலாயிரமுள நீளமுள்ள மனிதரிலிருந்து நாற்பது முள நீளமுள்ள மனிதர்கள் வரையிலும் அவர்கள் கூட விருந்த அகஸ்தியர், வசிஷ்டர், பராசர் அவர் பிள்ளை வியாசர், பிருகு முதலிய நமது முன்னோர் அவர்களுடைய ஆசார அனுஷ்டான சட்ட திட்டங்களை வகுத்த நூல்களை நாலுமுள மனிதர்களான நமது தலையில் ஏற்றினுல் அதன் பாரத்தைத் தாங்க முடியுமா? தாங்க முடியாமல் தானே நாலுமுள மனிதர்களுக்கு ஏற்ற சட்ட திட்டங்களில் வகுக் கப்பட்ட எல்லா மனிதர்களாலும் தடியடிபட்டுத் தன்மதிப் பிழந்தோம். நாலாயிரம், நானூறு நாற்பதுமுளமுள்ள மனிதர்களுடன் சண்டைபோட்டு திருவருள் பெற்று

சிரஞ்சீவி அடைந்து நாலுமுள மனிதர்களான நாம் வந்த உடனே நம்மைவிட்டு முன்னோர்கள் போய்விட்டார்கள். அவர்களில் பராசர் என்பவர் நாலுமுள மனிதனுக்காக பராசர ஸ்மிருதியென்று ஒரு நூல் செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அந்த நூலுமிருக்கிறது. அந்த நூலைப் பிரமாணமாகக் கொண்டால் முன்னோர் நூலின் பிரமாணத்தில் வாழவேண்டுமென்று நினைக்கும் நமது பண்டிதர் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாரும் அடிமை, தாசி மகன், ஆசாரம் கெட்டவன், ஒழுக்கமில்லாதவன் என்னும் சூத்திரனாக வேண்டும். நல்ல மடையன், நல்ல தாசிமகன், நல்ல அடிமை என்னும் சற்சூத்திரன ஆவதற்கும் சற்சூத்திரனென்று தன்னை மதித்துக்கொண்டிருக்கும் சில சைவர்களுக்கும் மனமொப்பாது. பார்ப்பனர்களுக்குத் தள்ளக்கூடியதும் கொள்ளக்கூடியதுமான அந்த சாஸ்திரத்தின் விதிகளை எல்லாம் பார்ப்பார்கள் விட்டார்கள். முன்னோர் நூலைப் பிரமாணமாகக் கொண்ட திரு. மணி. திருநாவுக்கரசு முதலியாருக்கும், பார்ப்பார்களுக்கும் அந்த நூல் பிரமாணமல்லாமல் தள்ளி விட்டால் பின் யாருக்கு அது பிரமாணம்? பாமர ஜனங்களுக்கு முன்னோர் நூலென்று சொல்லி ஏமாற்றி தாழ்த்திக் கொடுமை செய்து அவர்களால் பெருமையும் வயிற்றையும் நிறைத்துக் கொள்ள மட்டும் பிரமாணமானால் அது பாவமல்லவோ? அதற்கு எந்த முன்னோர் நூல் பிரமாணம். அந்த நூலையே சொல்லி அதனாலேயே காலம் தள்ளும் வைதீகர்களும் திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் சொல்லுகிறபடி கற்றவர்கள் தானே?

நாலாயிரம் முளமுள்ள இரண்யன் காலத்தில் தகப்பன் பேரைச் சொல்லாமல் விஷ்ணுவின் பேரைச் சொன்ன மகனைத் தண்டித்ததற்காக இரணியன் கொல்லப்பட்டு நீதியை நிலை நிறுத்தினதாகவும், நானூறுமுள மனிதன் காலத்தில் அரசன் இளைய பெண்ஜாதிக்குக் கொடுத்த வரத்தால் முதல் பெண்ஜாதியின் மகனைக் காட்டிற்கு ஓட்டி காட்டிற்குப்போன ராமன் பெண்ஜாதியை இராவணன் எடுத்துப் போனதும் அதனால் அவன் கொல்லப்பட்டது மான விபரங்களும், நாற்பது முளமுள்ள மனிதன் காலத்தில் சூதாடினதும் பெண்ஜாதியைத் தோற்றதும் ஜெயித்தவன் துயில் உரிந்ததும் அதை பெரிய முன்னோர்களெல்லாம் பார்த்துக் கொண்டிருந்ததும் தோற்றவர் காட்டிற்குப் போனதும் பின்வந்து தனது ராஜியத்தை ஜெயித்ததுமான சங்கதியும் தெரியப்படுத்தும் இவைகள் தெய்வம் மனிதனாக வந்து நடந்து காட்டினதாகவும் சொல்லப்படுகிறது. நாலு முளமுள்ள மனிதர்களான நமது இப்பொழுதுள்ள ராஜாக்களுக்கும் நமக்கும் அந்தக் கதைகளுக்கு ஏதாவது சம்மந்தமுண்டா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். அந்த காலத்துத் தெய்வம் இந்தக்காலத்தில் வந்து அவதாரம் செய்தாலும் அவைகள் நமது காலத்தில் நடக்க ஏது உண்டா? எந்த ராஜாவாவது சூதாடிப் பெண்ஜாதியைத் தோற்று சபையில் சீலையைப்பிடுங்க ஆகுமா? முதற் பிள்ளையைக் காட்டிற்குப் போகச் சொல்லி இரண்டாவது பிள்ளைக்குப் பட்டம் கட்ட இந்தக் காலத்திலிடமில்லை. ஒரு ராஜா பெண்ஜாதியை இன்னொரு ராஜா யெடுத்துப்போவதை இங்கிலீஷ் சட்டம் தடுத்தே விட்டது. அப்படி இருக்கையில் அந்தக் கதைகளால் நாம் கற்றுக்கொள்ளும் நீதியென்ன?

நமது முன்னோர் நூல்கள்.

புராணத்தைப்பற்றியே தர்க்கித்து எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று வாசகர்களுக்குச் சலிப்பும், கோபமும் வரக்கூடும். பிரயோஜன மில்லாததையும், உபயோகப் படாததையும், உண்மைக்கு விரோதமானவைகளையும் உடனே தள்ளிவிட வேண்டியது தான். ஆனால் நெடுங்காலமாக நாம் ஆசார அனுஷ்டானங்களில் பழையவழக்கங்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றி நடப்பதில் வழக்கப்பட்டுத் தேறியிருக்கிறோம். நாம் ஆராதனை செய்துவரும் பழைய மாதிரிகளைத் தவிர வேறுமாதிரிகளை உண்டாக்க முடியுமென்ற எண்ணமே நமக்கில்லை. நமது பண்டிதர்கள் உயர்ந்த இலக்கிய இலக்கணங்களில் பயிற்சி பெற்றிருந்தாலும் அதன் கூட்டல் கழித்தல் கணக்கையே இனியும் போட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். உயர்ந்த யோசனை செய்வதில்லை. மனிதருக்கும், நூல்களுக்கும், சைகைகளுக்கும், எல்லைகளுக்கும், கற்பனைத் தடைகளுக்கும் தலை குனிந்து பல தலைமுறையாய் வழக்கமாய் விட்டபடியால் எந்தத் துறையிலும் நாமாக ஒன்று செய்ய முடியும் மென்கிற உண்மை நம் முகத்தின் முன்னே நின்றாலும் கண்ணுக்குத் தெரியாமல் போகிறது. ஐரோப்பிய மூக்குக் கண்ணாடியும் போட்டு ஆங்கில பாஷையை ஆபரணமாகப் போட்டுக் கொண்டாலும் நமக்குத் தெளிவுண்டாகவில்லை. பிறவி முதல் கட்டுப்படக்கற்று அவிழ்க்கக் கற்காமல் நமக்கு நேரிடும் சகல விபரீதங்களுக்கும் தலைகுனிந்து நிற்கிறோம்.

மனிதர்களுக்கு எல்லா உரிமைகளும் எல்லா நாட்டிலு முண்டு. நமது நாட்டிலே மனித உரிமைகள் நூல் வசனங் களாலும், பழமொழிகளாலும், கிரிகைச் சடங்குகளாலும், தெய்வத்தின் பெயராலும் மறுக்கப்பட்டிருக்கின்றன. நமது நாட்டில் ஜாதி, சமயம், தெய்வ வழிபாடு இவை களெல்லாம் அடிமைகளை உண்டுபண்ணவே உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன. இத்தனைக்கும் காரணம் புராணங் களும் அதை ஆதாரமாகக் கொண்ட சமயங்களுமே என்று சுயமரியாதைச் சங்கம் விபரமாக எடுத்துச் சொல்லுகிறது. இது அனுபோகமும், கற்றவர் வார்த்தையுமாகும். யுக்தி அனுபோகங்களுக்கு ஒத்துவராதவைகள் எந்த சாஸ் திரத்திலிருந்தாலும் தள்ளிவிட வேண்டுமென்பதே மேலான அறிவின் வார்த்தையாக விருக்கிறது.

நாம் தேகம், பொருள், ராஜ்யம், சுகம் முதலியவைகளி லெல்லாம் ஏழையாகப் போய்விட்டோம். அந்த ஏழ்மையை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியமாய் விட்டது. அத னால் அதற்கு ஆசைப்படுகிறோம். ஜப்பானுக்கு முன்னோ ரான புத்த பகவானின் ஞானத்தைக் கொண்டும், ஐரோப் பாவின் முன்னோரான ஏசுகிறிஸ்துவின் ஞான உபதேசத் தைக்கொண்டும் அந்த தேசங்கள் வாழ்ந்திருந்தால் அவர் கள் இவ்வளவு உன்னத நிலைமையில் வசிக்க முடியுமா? அவர்கள் தற்கால விஷயங்களை யெல்லாம் தங்கள் அறிவின் முயற்சியால் சரிப்படுத்திக் கொண்டார்கள். அதுபோலவே நமது முன்னோர்களான பக்திமான்கள், ஆசாரிகள் இவர் கள் ஞானத்தைக்கொண்டு நாம் வாழ முடியுமா? நமக்குப் பலமென்று கருதிய முறையை நமக்குத் துர்பலமாக மூன்

டது கண்டோம். ஆகவே நமது விஷயங்களை யெல்லாம் நாமே அறிவுபெற்றுப் பார்க்க வேண்டும். நேற்று அப்படி இருந்தோம், இன்று உலகமெப்படி இருக்கிறது. எவ்வாறு அனுபோகத்தில் தெரிகிறது. ஒவ்வொரு ஸ்தாபனமும் அவ்வக்காலத்திலேற்பட்ட நாணயங்களுக்குச் சமம். நமது பிரதிமையை அதில் பதிப்பிக்கிறோம். சீக்கிரமே அது அழிந்து தேய்ந்து போகிறது. சீக்கிரமே அது நாணய சாலைக்குத் திரும்பிப் போய்விட வேண்டும். பொருள் நிலையை உண்டாக்கியும், அழித்தும், மறுபடியும் உண்டாக்கியும் இப்படித் தொழில் நடத்துவதில் பிரகிருதி சந்தோஷங் கொள்கிறது. ஜீவனாக ஓடிக்கொண்டிருக்கிற தென்பதற்கும் தெய்வ சக்தி அழியாமல் எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருப்பதற்கும் அடையாளம் இடைவிடா மத மாறுந் தன்மைதான்.

இவைகளை யெல்லாம் கேட்ட திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார் சுயமரியாதைச் சங்கத்தார்கள் முன்னோர் நூலை இகழ்கிறார்கள். கற்றோர் சொல்லைத் துரும்பென மதிக்கிறார்கள். அது அவர்களின் புல்லறிவின் வீக்கம் போலுமென்று சொல்லுகிறார். அதனால் முன்னோர் நூலான புராணங்களை இன்னும் விவரித்துச் சொல்லவேண்டி யிருக்கிறது. முன்னோர் நூலைப்படித்த பண்டிதத் திறமையான கட்டடமெல்லாம் தருமக் குறைவையும், குருட்டறிவையும் உண்டு பண்ணுகின்றன. உள்ளிருக்கும் தருமக் காட்சிக்கு அதன் உத்திரம் நேரில்லை என்றே சுயமரியாதைச் சங்கம் சொல்லுகின்றது. தனது பரிபூரணத் தன்மையைப் பயிற்சி செய்யும் பண்டிதனையும் தெய்வ விரோதமெனக் குருட்டுக்

கொள்கையை தைரியத்துடன் எதிர்த்துப் பேசும் பண்டிதர்களையும், ஜனங்களின் உயிருள்ள வளர்ச்சியையும், உண்மையையும் மேலாகவெண்ணி கேவலம் காரிய லாபத்தையும், வலிமையையும் தாழ்வாக நினைத்து உலகம் சேர்த்து வைத்திருக்கும் சௌந்தரிய ரூபங்களின் சக்திகள் ஜனங்களுக்கு உபயோகப்பட வேண்டிய அவசியம் தங்கள் மதிக்குள்ளே பாய்ந்துவிட்ட பண்டிதர்களையும் குற்றம் சொல்ல சுயமரியாதை இயக்கம் வந்ததன்று. அவர்களை மேலாக நினைத்துப் போற்றுவதே தங்கள் கடமை எனவும் நினைத்திருக்கிறார்கள். மனுஷியப் பொது ஜன உத்தம லக்ஷியங்களைப் பரவச் செய்வதில் தடையாக விருக்கும் பண்டிதர்களின் கல்நெஞ்ச சம்பிரதாயங்களையும் சுயமரியாதைச் சங்கம் கணடிக்க வேண்டியிருக்கிறது. கண்டிப்பதற்கு ஞாயமிருக்கிறதா? அது சரியா? எந்த ஞாயத்தால் கண்டிக்கிறார்கள்? அந்த ஞாயத்தின் ஒழுங்கும், யுக்தியும், அனுபோகமும் ஒத்திருக்கிறதா? அதற்கு அந்தப் பண்டிதர்கள் சொல்லும் பதில் என்ன? என்பவைகளை வாசகர்கள் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நமக்கு ஆதி முன்னோர்களான பிர்மா, சிவன் முதலியவர்கள் சொன்ன வேத சுருதிகள், ஆகமச் சுருதிகள் சூத்திரர்களான நமக்கு அதில் அதிகாரமில்லை யென்று அவர்களே சொல்லிவிட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆனதால் அதைப் பின்னால் கவனிப்போம். அறிவாளியான பிராமணன் தவிர அறிவில்லாத சூத்திரர்களுக்கெல்லாம் புராணமே பிரமாணமென்று முன்னோர் நூல்கள் கூறுகின்றன. பிர்மம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவுஷி

யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிர்ம்ம கைவர்த்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சம், காருடம், பிர்மாண்டம், என்னும் பெயர்களுடைய புராணம் 18, சனற் குமாரம், நாரங்கம், நாரதீயம், சிவதருமம், தூருவாசம், காபிலம், மானவம், அவுசனம்,வாருணம், காளிகம், சாம்பேசம், நந்திகேச்சுரம், சவுரம், பாராசரம், ஆதித்யம், மகேசுரம், தெவீ பாகவதம், வாசிஷ்டலிங்கம் என்னும் உபபுராணங்கள் 18. இதற்குப் பிறகு கணக்கற்ற ஸ்தலாதி புராணங்களும், இந்தப் புராணங்களைப் படித்துப் பாடின பாட்டுகளும், செய்த ஏடுகளும் பண்டிதர்கள் தங்கள் தங்கள் கடவுளுக்கு சொல்மாலை சாற்றின கைங்கிரிய புஸ்தகங்களும் தங்கள் தங்கள் தெய்வங்களை மேன்மைப் படுத்துவதற்கு மற்றவர்கள் தெய்வங்களை தாழ்மைப்படுத்தி எழுதினவைகளும், தங்கள் தெய்வத்தை உயர்வாக எழுதினவைகளும், சைவசமயத்தைப் படித்து அதன் வெளி ஆசாரங்களை அனுஷ்டித்து வந்தவர்களும், சைவ சமயத்தைப் படித்து வைணவ வெளிச் சம்பிரதாயங்களை அனுஷ்டித்து வந்தவர்களுமான சில பணக்காரனோ, பண்டிதனோ இறந்தபின் அவர்களுக்குக் கடவுள் நேரில் வந்து காட்சி கொடுத்து தங்கள் இருப்பிடங்களுக்கு அழைத்துக்கொண்டு போனதைப்பற்றின விஷயங்களும், பௌத்த மதஸ்தர்களை அழிப்பதற்கும், இந்து மதத்தில் சேர்ப்பதற்கும் ஆகமாதி பல தந்திர கிரந்தங்களை உண்டாக்கி அவற்றின் உதவியால் விக்கிரகாராதனையும் அவற்றிற்கு நித்திய நைமித்தியாதி பூஜைகளும் இரதோற்சவாதி வேடிக்கை விநோதங்களையும் செய்வித்து பிராமண மதத்தையும், ஆதிக்கத்தை

யும் மேற்கொள்ளச் செய்வதற்குச் செய்த நூல்களே அநேகம். இத்தனையும் படித்து அதிலிருந்தே விஷயங்களை யெடுத்துத் தொகுத்துப் பண்டிதத் திறமையைக் காட்டின நூல்களும், பண்டிதர்களுக்கும், தெய்வங்களுக்கும் பெருமை நினைத்துப் பாடப்பட்ட பாடல்களும் இன்னும் இதை சம்பந்தித்த நூல்களும் அநேக ஆண்டுகளாக பண்டிதர்கள் இதே வேலையை மேற்கொண்டிருந்ததினால் தர்க்கம், சண்டை, அர்த்தம் முதலியவைகளாக அநேக நூல் களும் குவிந்து விட்டன. இந்த நூல்களினாலெல்லாம் நாமடைந்த நன்மைகளென்ன வென்பதே கேள்வி? இவை கள் ஒன்றுக்கொன்று ஆபாசமான தூஷணையும், விரோத மும் ஏற்றித் தாழ்த்தியும் பொருத்தமல்லாத விஷயங்களும் புத்தி ஒத்துக்கொள்ளாத சங்கதிகளுமல்லவா நிறைந்து கிடக்கின்றன.

நூற்றைம்பது வருடமாக இங்கிலீஷ் அரசாங்க மிருந் தும், இங்கிலீஷ் கல்வி இருந்தும் அவைகள் நம்மை முன்னேற்றமடைவதற்குத் தகுந்தவாறு கற்பிக்கப்பட வில்லையே ஏன் என்று இங்கிலீஷ்காரர்களைக் கேள்கிறோம். லெட்சக்கணக்கான வருடமாக நமது முன்னோர் நூலும், அதன் கல்வியும், அதைப் படித்த பண்டிதர்களும் இருந்தும் நாம் எவ்விஷயத்தில் முன்னேற்ற மடைந்திருக்கிறோம் என்பதற்கு ஒரு பதில் வேண்டாமா? எழுத ஒரு பேனாச் செய்வதற்குக்கூட அவை உபயோகப்பட வில்லையே! நமது கல்வி யெல்லாம் இவ்வுலக விஷயங்களை அனித்திய மென்று தள்ளி பரலோக சுகத்திற்கே உபயோகப்படக் கூடிய தென்று சொல்லுவோமானால் அந்தப்படி அக்கல்வியால்

ஜீவன் முக்தர்கள் வீதியெல்லாம் நிறைந்து கிடக்க வேண்டுமே! அப்படியுமில்லையே, வைராக்கியமுடைய பயிராகிகளுக்குசதாவர்த்தியோடு நெய்யும் வேண்டுமென்கிறார்களே! சைவ சந்நியாசிகள் தங்கள் நேம நிஷ்டைகளில் செலுத்தும் நேரங்களைவிட சைவ சமயத்திலும் பெரிய புராணத்திலும் அதிகப் பற்றுதலையுடையவர் இருக்கும் வீட்டை விசாரிக்க அவர்களுக்கு அதிக நேரம் வேண்டியிருக்கிறது. திருப்பதி மருந்துவிற்கு சென்னை வைத்தியமும், இங்கிலீஷ் நர்சின் பத்தியமாகவுமல்லவா ஒத்துக்கொள்ளுகிறது. சைவ மடாதிபதிகளுக்கோ வெள்ளிக் குத்துவிளக்கில்லாமல் அவர்கள் பள்ளியறை அனுஷ்டானம் சம்பூரணமடைவதில்லை. ஆயிரக் கணக்கான ரூபாய் நெய்யும் பத்தியபாகமான நைவேத்தியமுமில்லாவிட்டால் பெருமாள் திருப்பாற்கடலிலிருந்துவந்து சீரங்கத்தில் பள்ளிகொள்ள மாட்டார் என்பது நமது முன்னோர் நூலில் தீர்மானமாயிருக்கிறதே! அறுகால பாவாட அமுதும் நடினமாதரும் நடராஜருக்கில்லாவிட்டால் அவர் இருந்த கைபர் கணவாயிக்குப்போய் விடுவார் என்று அவர்கூட வந்த தீக்ஷதர்கள் சொல்லுகிறார்கள். தெய்வங்களுக்குப் பூசை செய்யும் அர்ச்சகர்கள் பிரசாதமென்று சோற்றுக்கடை வேலையிலல்லவா அவர்கள் பரலோக ஆசை முடிகிறது. நடராஜருடன் கூடவந்த தில்லைவாழ் அந்தணர்கள் விபூதியும் குங்குமமும் பொட்டணம் கட்டி அனுப்பி ஊர் ஊராய் போவது எந்த பரலோகத்தை நினைத்து? நமது முன்னோர் நூலின் பாரமார்த்தீகத்தைப் படித்து எல்லோருக்கும் பரலோகத்தைக் காட்டவேண்டிய இவர்கள் உயிரின் வாழ்க்கை ஒரு கோப்பை காப்பிக்கும்

ஒரு சோடா பாட்டிலுக்கும் ஆனந்தப்படுகையில் நமது முன்னோர் நூல்கள் மற்ற ஜனங்களுக்கெல்லாம் பாரமார்த்தீகத்திற்குத் தான் உபயோகப்படுமா என்பதை ஆலோசித்துப் பார்க்கையில் பாரமார்த்தீகத்திற்கும் அது உபயோகப்படவில்லை என்பதும் விளங்கிவிடவில்லையா ?

பிர்மாவானவர் கிருதயுகத்தில் நூறு கோடி கிரந்தங்களாக புராணத்தை ஒரே நூலாகச் செய்தார். திரேதா யுகத்தில் அதை ரிஷிகள் 118 சம்கிதை யுள்ளதாகவும் 18 பிரிவுள்ள ஒரு கோடி கிரந்தங்களாகச் செய்தார்கள். அவைகளை வேதவியாசர் துவாபரி யுகத்தில் இலட்சம் கிரந்தங்களுள்ள பதினெட்டு புராணங்களாகச் செய்ததாக முன்னோர் நூல்கள் கூறுகின்றன. இந்த கிரந்தங்களின் வரலாறுகளையும் அதில் காணும் விஷயங்களையும் எழுத இடமுமில்லை; வாசகர்களுக்கும் சலிப்புத் தோன்றுமென்று நினைத்து ஒன்றிரண்டைக் கீழே குறித்து விட்டு இடம் கிடைக்கும் போதெல்லாம் மற்றதை எழுதுகிறேன்.

பிர்மாவானவர் கமலாசனத்திலிருந்து சிருஷ்டி செய்த வைபவத்தைப்பற்றிப் புலஸ்தியருக்குச் சொன்னது பத்ம புராணம் பதினெட்டு புராணங்களில் அதுவுமொன்று. அதை புலத்தியர் பீஷ்மருக்குச் சொல்ல அதை ரோமரிஷியின் பிள்ளை சூதர், நைமிசாரணிய ரிஷிகளுக்குச் சொன்னார். அதில் ஜைனமதஸ்தர், மிலேச்சர்கள் வந்த சங்கதிகளும், ஸ்ரீரங்கம், திருப்பதி, விஜயநகர இராயலு சரித்திரங்களும் சொல்லப்படுகின்றன. பிர்மா வானவர் புலத்தியனுக்குச் சொன்னது கிருதயுகத்தில். அவர் பீஷ்மருக்குச் சொன்னது துவாபரியுகத்தில். கிருதயுகத்திலும் துவாபரி

யுகத்திலும் ஸ்ரீரங்கம், திருப்பதி விஜயநகர ராயர் கூட்டம் சமணமதம் இவைகளிலிருந்தாலும் முன்னோர் நூல்கள் கணக்குப் பிரகாரம் இன்றைக்குப் பத்மபுராணம் உபதேச மாகி அறுபது எழுபது இலட்சம் வருடங்களுக்கு மேலாகிறது.

அக்கினிபகவான் வசிஷ்டருக்குப்போதித்தது அக்கினி புராணம். இதுவும்பதினெட்டுபுராணங்களிலொன்று. இதை வியாசர்கற்று சூதருக்குச் சொன்னார். இதில் பாணினி, விக்கிரமாதித்தன், சாலியவாகனன் முதலானவர்கள் கதை களுமிருக்கின்றன. அக்கினி பகவான் விக்கிரமாதித்தன் சாலியவாகனன் பாணினி முதலிய அவர்களின் கதைகளை உபதேசித்தால் அது எப்பொழுதென்று பண்டிதர்களைத் தானே கேட்கவேண்டும்.

நமது முன்னோர் நூல்களுக்கெல்லாம் முதல் நூலான இராமாயணத்தைப்பற்றி ஒரு முக்கிய பாகத்தைச் சொல்லி இந்த வியாசத்தை முடித்துவிடுகிறேன். ராமாயணத்தில் வால்மீகி ராமாயணமே முக்கியமானதாகும். ஆதியில் ராமாயணத்தை பிர்மா நூறு கோடி சுலோகங்களாகச் செய் தார். அவை அந்தந்த லோகங்களுக்குப் பிரித்துக் கொடுக் கப்பட்டதில் ராமா என்கிற இரண்டு அக்ஷரங்கள் மீந்தது. அதை பரமேஸ்வரன் வைத்துக் கொண்டார். பாரத வருஷத்திற்குக் கிடைத்த பாகத்தை வைத்துக்கொண்டு வேத வியாசர் 17 புராணங்களையும் பாரதத்தையும் செய் தார். அதில் அவர் திருப்தியடையவில்லை. சரஸ்வதி நதிக் கரையில் கவலைகொண்டு வியாசர் இருக்கையில் இரண்டா வது கணக்கில் மீதமான நாலு சுலோகத்தை நாரதர் உப

தேசம் செய்தார். அதைக்கொண்டு பாகவத புராணத்தில் ராமாயண ஆரம்பத்தைக் கீழே சொல்லுகிறேன்.

விஷ்ணுவும், லெட்சுமியும் காவல் வைத்துவிட்டு பள்ளியறையில் கிரீடித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அங்கே பிர்மாவின் மக்களான ஜனகாதி மகரிஷிகள் வந்து உள்ளே போனார்கள். காவற்காரர்களான விஜயன், ஜெயன் என்பவர்கள் போவதற்கு சமயமல்லவென்று தடுத்தார்கள். ஜனகாதி மகரிஷிகளுக்குக் கோபம் வந்து நீங்கள் ராக்ஷதர்களாகப் பிறக்கக் கடவது என்று சாபம் கொடுத்தார்கள். இதைக் கேட்டு விஷ்ணு வந்து அவர்களை வணங்கி இவ்விதமான அயோக்கியர்களை ஆளாக வைத்துக்கொண்டது எனது குற்றம்; என்னை வணங்குகிறவர்களாக நீங்களிருந்தாலும் பிராமணர்களின் பாதத்தை என் சிரசில் அணிந்துகொண்டிருக்கிறேன். உங்களை நானறிவேன் மடையர்கள் அறியமாட்டார்கள் என்று அவர்களை சமாதானப்படுத்தி விட்டு விஜயன் ஜெயன் என்னும் தனது வேலைக்காரர்களைப் பார்த்து பிராமணர்கள் வார்த்தையை தடுக்க யாருக்கும் அதிகாரமில்லை. நீங்கள் செய்த த[illegible]த்தை நீங்கள் அனுபவித்துத் தான் தீரவேண்டும். நீங்[illegible] பூலோகத்தில் போய் ராக்ஷதர்களாகப் பிறங்கள்; நான் வ[illegible] சம்சாரம் செய்து ரக்ஷிக்கிறேன் என்று சொன்னார். [illegible] பிரகாரம் அவர்களும் பிறந்தார்கள் அவர்களே இரண்ய[illegible] இரண்யகசிபு. இராவணன் கும்பகர்னன். இதை கவனி[illegible] பாருங்கள், எஜமானனும் எஜமானியும் பள்ளிகொண்[illegible] கிறார்கள், அங்கே போகாதீர் என்று வேலைக்கார[illegible] சொன்னால் அவர்களுக்குச் சாபம் கொடுக்கும் [illegible]

அதுவே நியாயமென்று சொல்லும் விஷ்ணுவும் அந்தக் கதையே நமது வாழ்க்கைப் பிரமாணமாக விருந்தால் நமது ஒழுங்குகளும், கடமைகளும் நியாயங்களும், எவ்வளவு செவ்வையாக நடந்திருக்கும். அவ்வித ஒழுங்கோடு இருந்ததினால்தான் நமது நாடு ஒரு சிறு கூட்டத்துத் தலைவனான மகமது கஜினிக்குப் பலதடவை அடிமைப்பட்டது.

பாகவதம் முன்னோர் நூலில் விசேடப்பட்டது. அதைக் குற்றம் சொன்னால் பாவியாகிவிடுவான். அதன் பிரமாணத்தை ஒத்துக்கொள்ளா விட்டால் புல்லறிவின் வீக்கம் பொருந்திவிடும். ஆதலால் அதன் பிரமாணத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். அதை ஒத்துக்கொண்டால் பார்ப் ...னை படுக்கையறையில் தடுக்கப்படாது. ஜனகாதி மகரிஷி ...ளென்றோ மற்ற ரிஷிகளென்றோ நாம் எப்படிக் கண்டு ...டிப்பது? பூணூல்போட்ட பார்ப்பானெல்லாம் பிராமணன் ...னே அவன் பாதம் விஷ்ணுவின் தலையில் விளங்குவதாக ...ல்லவோ முன்னோர் நூல் சொல்லுகிறது. ராமாயணப் ...ரகாரம் பார்த்தால் படுக்கை வீட்டில் பிராமணனைத் ...க்கப் பிரமாணமில்லை. லெட்சுமி மானத்தை விடவா ...து மானம் பெரிது? பெரிய புராணப் பிரகாரம் பார்த்தால் ...மணன் சிவச்சின்னமணிந்து வந்து பெண்ஜாதியைக் ...ட்டால் கொடுக்காமலிருப்பதற்குப் பிரமாணத்தைக் ...ணும். இதில் எந்த முன்னோர் நூலைப் பிரமாணமாகக் ...ள்ள வேண்டுமென்பதை நமது பண்டிதர் மணி. ...ாவுக்கரசு முதலியார் தான் சொல்ல வேண்டும்.

ஸ்ரீ கைவல்ய சுவாமிகள் கட்டுரைக் களஞ்சியம்.

விலை விபரம்.

புஸ்தகம் 1க்கு	விலை	ரூ	0—2—(
,, 10க்கு	...	ரூ	1—0—(
,, 25க்கு	...	ரூ	2—4—(
,, 50க்கு	...	ரூ	4—4—(
,, 100க்கு	...	ரூ	8—0—(

ஒரு புஸ்தகம் வேண்டியவர்கள் இரண் டரையணா ஸ்டாம்புகள் தபாலிலனுப்பவும் மொத்தமாக வேண்டியவர்கள் பாதித்தொகை முன் பணம் அனுப்ப வேண்டும்.

வி. பி. சார்ஜ், தபால் செலவு பிரத்தியேகம்.

விலாசம்:—

நாடார் குல மித்திரன் ஆபீஸ்,

அருப்புக்கோட்டை,

இராமநாதபுரம் ஜில்லா.